

இளைஞர் அறிக்கை

தேசிய ஆலோசனை அறிக்கை

# 2015

க்குப்பின்

மேம்பாட்டுக் கட்டமைப்பு

# இந்தியா

UNITED NATIONS
संयुक्त राष्ट्र

© ஐக்கிய நாடுகள் குடியிருப்பாளர் ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் மே 2013
இந்த அறிக்கையின் பகுப்பாய்வு மற்றும் பரிந்துரைகள், ஐக்கிய நாடுகள் அல்லது அதன் முகமைகளின் அலுவல்சார் கருத்துக்களைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. உரைப் பொருட்களை தடையின்றி, முறையான குறிப்புரையுடன் பொருந்தும் வகையில், மறுஉருவாக்கம் செய்யலாம். புகைப்படம்சார் பொருட்களுக்கான அனைத்து உரிமைகளும் பதிவு செய்யப்பட்டவை.

அட்டைப் புகைப்படம் © ஐநா பெண்கள் அனிந்தித் ராய் - சௌத்ரி

தேசிய ஆலோசனை அறிக்கை

UNITED NATIONS
संयुक्त राष्ट्र



© யூஎன்டிபி/ஜெய் மண்டல்

# இளைஞர் அறிக்கை
# தேசிய ஆலோசனை அறிக்கை
# 2015
# க்குப்பின் மேம்பாட்டுக் கட்டமைப்பு
# இந்தியா

2015-க்குப்பின் இந்திய மேம்பாட்டு கட்டமைப்பிற்கான தேசிய ஆலோசனை அறிக்கையானது, 2015-க்குப்பின் மேம்பாட்டுக் கட்டமைப்பிற்கான உலகளாவிய கலந்தாலோசனைகளுக்கு வழங்கப்படும் ஓர் உள்ளீடாக, செப்டம்பர் 2012 முதல் பிப்ரவரி 2013 வரை இந்தியா முழுவதும் மேற்கொள்ளப்பட்ட கலந்தாலோசனைகளின் ஒரு தொகுப்புரையாகும். அரசு, தொழிற் சங்கங்கள், தொழில்துறை, பெண்களின் கூட்டமைப்புகள், விவசாயிகள் கூட்டமைப்புகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பொதுவியல் சமூகம் மற்றும் இளைஞர் அமைப்புகளின் பிரதிநிதிகளான தேசிய கூட்டுனர்களால் இச்செயல்முறை வழிநடத்தப்பட்டது. இளைஞர் தொகுதியிலிருந்து பெறப்பட்ட கண்டுபிடிப்புகளை இந்த அறிக்கை தொகுத்தளிக்கிறது.



# இளைஞர்

## ஜோஷ், ப்ரவாஹ், ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் மற்றும் தி ஒய்பி ஃபவுண்டேஷன் ஆகியவற்றால் கூட்டப்பட்டது

ஜோஷ்: 2006-ல் தகவலறியும் உரிமை இயக்கத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட ஜோஷ்-ன் முக்கிய குறிக்கோள், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பேற்றல் தொடர்பான விவகாரங்களில் இளைஞர்களை ஈடுபடுத்துவதாகும், இது கல்வி மற்றும் ஆளுகை மீது சிறப்புக் கவனம் செலுத்தும். கல்லூரி மற்றும் பல்கலைக்கழக இளைஞர்கள் மட்டுமின்றி, நகர்ப்புற இளைஞர்களுடனும் கல்வி குறித்து, உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையுடன் ஜோஷ் பணிபுரியும், இதில் இளம் நபர்களுடன் சேர்த்து, தங்கள் உரிமைகளைக் கோருவதற்கு அவர்களுக்கு உதவும் வகையில், சமுதாயத்தையும் பெரிய அளவில் அது ஈடுபடுத்துகிறது. வலைத்தளம்: http://josh4india.org

ப்ரவாஹ்: ஐவைவயைவநன வை 1993-ல் தொடங்கபபட்ட ப்ரவாஹ்-ன் நோக்கு, சமுதாய மாற்றத்திற்கான தலைமைப் பண்பினை இளைஞர்களிடம் உருவாக்குவதாகும். நாடெங்கிலும் உள்ள அமைப்புகள் மற்றும் இளம் நபர்களிடம் ஏராளமான திட்டங்களை வடிவமைத்து, செயல்படுத்துவதில் அவர்களுக்கு வளமான அனுபவம் உள்ளது. தங்கள் சொந்த மேம்பாட்டில் முதலீடு செய்கின்ற அதே நேரத்தில், சமுதாய மாற்றத்தை வழிநடத்துவதற்கும் இளைஞர்களுக்கு பிரவாஹ்-ன் குறுக்கீடுகள் உதவுகின்றன. தங்கள் கூட்டாளர்களுடன் இணைந்து, தற்போது இளைஞர் மேம்பாடு மற்றும் குடிமக்கள் நடவடிக்கை ஆகியவற்றை பிரவாஹ் மேற்கொள்கிறது. வலைத்தளம்: http://www.pravah.org

ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட்: யூகேயில் அமைந்துள்ள இளைஞர்களால் நடத்தப்படும் மேம்பாட்டு முகமையின் ஒரு பிரிவான ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் இந்தியா, மேம்பாட்டு முயற்சிகளில் ஓர் ஆற்றல்மிக்க மனித ஆதாரவளமாக இளைஞர்களை ஒன்று திரட்டி, ஆற்றலளிக்கின்ற மற்றும் இளைஞர்கள் மீது கவனம் செலுத்துவதை உள்ளடக்கும் விதத்தில், அரசின் செயல்திட்டங்கள்

மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பொறுப்புறுதியையும் கொண்டுள்ளது. பாலியல்சார் இனப்பெருக்க ஆரோக்கியம், வாழ்வாதாரங்கள் மற்றும் குடிமை சார்ந்த பங்கேற்பு போன்ற விவகாரங்களைச் சுற்றி ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் பணிபுரிவதுடன், 2012-ல், நான்கு இந்திய மாநிலங்களில் சுமார் 90,000 இளைஞர்களை இது சென்றடைந்துள்ளது. வலைத்தளம்:
http://www.restlessdevelopment.org/india

தி ஒய் பி ஃபவுண்டேஷன்: 2002-ல் நிறுவப்பட்ட தி ஒய்பி ஃபவுண்டேஷன், திட்டங்களை உருவாக்குவதற்கும், பாலினம், பாலியல் பண்பு, ஆரோக்கியம் மற்றும் உரிமைகள், கல்வி, டிஜிட்டல் மீடியா, கலை மற்றும் ஆளுகை ஆகிய துறைகளின் கொள்கைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்த இளைஞர்களுக்கு உதவுகின்ற, இளைஞர்களால் நடத்தப்பட்டு, வழிநடத்தப்படும் அமைப்பாகும். இந்த அமைப்பு, தலைமைப் பண்புகளை உருவாக்கி, இளைஞர்களால் வழிநடத்தப்படும் முயற்சிகள் மற்றும் இயக்கங்களை பலப்படுத்துவதன் மூலம், இளைஞர்களின் மனித உரிமைகளை மேம்படுத்துகிறது, பாதுகாக்கிறது மற்றும் வளர்ச்சியுறச் செய்கிறது, மேலும் இது, தொடங்கப்பட்ட நாள் முதல், இந்தியாவில் 18 மாநிலங்கள் முழுவதிலும் 200-க்கும் அதிகமான திட்டங்களை அமைத்து, 300,000 இளைஞர்களைச் சென்றடைந்துள்ளது. வலைத்தளம்:
http://www.theypfoundation.org

## ஆலோசனைசார் செயல்முறை மற்றும் முறைமை

இளைஞர்கள் ஒருங்கிணைப்புக் குழு என்ற முறையில் ஜோஷ், ப்ரவாஹ், தி ஒய்பி ஃபவுண்டேஷன் மற்றும் ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் ஆகியவை, இந்தியா முழுவதிலும் உள்ள 100-க்கும் அதிகமான இளைஞர் அமைப்புகளுடன் 2013 பிப்ரவரியில் ஐந்து மண்டல ஆலோசனைக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தது. ப்ரவாஹ் கிழக்கு மற்றும் வட-கிழக்கு மண்டலத்திலும், ஜோஷ் மேற்கு மண்டலத்திலும், தி ஒய்பி ஃபவுண்டேஷன் வடக்கு மண்டலத்திலும், ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் தெற்கு மண்டலத்திலும் ஆலோசனைக் கூட்டங்களை கூட்டின. மண்டல பேச்சுவார்த்தைகளின்போது கலந்தாலோசிக்கப்பட்ட மிக முக்கியமான அம்சங்களை ஒன்று சேர்த்து, மண்டல ஆலோசனைகள் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், ஒரு தேசிய அறிக்கையை இளைஞர்கள் ஒருங்கிணைப்புக் குழு சமர்ப்பித்தது. ஆலோசனை செயல்முறைக்கு, ஐக்கிய நாடுகள் மக்கள்தொகை நிதியம் (UNFPA) மற்றும் ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (UNICEF) ஆதரவளித்தன. இந்த அறிக்கைகளை இணையத்தில் பின்வரும் வலைத்தளத்தில் அணுகலாம்:
http://www.worldwewant2015.org/node/301679

ஒவ்வொரு ஆலோசனை செயல்முறையும் மூன்று நாட்களுக்கு நடைபெற்றது. இளைஞர்களின் பிரச்சனைகள் மற்றும் கவலைகள் முழுமையான முறையில் கையாளப்பட்டதால், சுய மதிப்பீடு மற்றும் தனிப்பட்ட அனுபவங்களைப் பகிர்தல் ஆகியவை முக்கிய செயல்முறைகளாக அமைந்ததுடன், அது பங்கேற்பாளர்கள் தங்கள் கருத்துக்களை தயக்கமின்றி பரிமாறிக் கொள்ளவும் உதவியது. மொத்தத்தில், ஐந்து ஆலோசனைகளின் வடிவமானது, சிறிய குழுக்களில் ஆலோசனைச் செயல்முறைகளைக் கொண்டிருந்ததுடன், பரிந்துரைகளைத் தெரிவிப்பதற்கு ஒருமித்த மற்றும் கூட்டு கருத்துக்களுக்கு ஊக்கமளிப்பதற்கான நிறைவான கலந்துரையாடல்கள் மற்றும் உரை வழங்கல்களும் அதில் இடம்பெற்றிருந்தன. யுக்திகள் மட்டுமின்றி, உருவாகும் பரிந்துரைகளுக்கான வெற்றியின் அளவுருக்களையும் ஒவ்வொரு குழுவும் கூட்டாக எடுத்துரைத்தது.

அனைத்து அமர்வுகளிலும் கலந்தாலோசிக்கப்பட்ட கேள்விகளின் ஒரு விரிவான பட்டியல், பின்வரும் விரிவான வகைப்பாடுகளின் கீழ் அமைந்திருந்தது:

- கொள்கையில் மாற்றங்கள்
- கவலைக்குரிய பிரிவுகள் மற்றும் முக்கியக் கேள்விகள்
- நிலைகாட்டிகள் மற்றும் திட்டமிட்ட இலக்குகளுக்கான காலவரையறைகள்
- ஆனுபுக்களின் செயல்திறன்
- உலகளாவிய போக்குகள்
- இந்தியாவின் எதிர்கால முன்னேற்றத்திற்கான தொலைநோக்கு
- தடைகள் மற்றும் சவால்கள்
- பாலினம் மற்றும் பெண்கள்
- ஏற்றத்தாழ்வு
- வறுமை
- மக்கள் தொகையியல்

- 2015-க்குப்பின் கட்டமைப்பு
- ஆளுகை இடைவெளிகள்
- இளைஞர்களின் தேவைகள்
- புகலிடம் ∴ பாதுகாப்பு

பின்வரும் விரிவான வகைகளின் கீழ் ஆலோசனை செயல்முறையானது கருப்பொருட்களை கலந்தாலோசித்தது.

- கல்வி
- சுகாதாரம்
- வளர்ச்சி மற்றும் வாழ்வாதாரம்
- சுற்றுச்சூழல்
- இளைஞர்
- அமைதி
- வறுமை
- சுற்றுச்சூழல்
- ஆளுகை
- ஆனுப்-க்கள்
- தகவல்
- சேவைகள்
- பாதுகாப்பு மற்றும் பத்திரத்தன்மை
- புலப்பெயர்வு மற்றும் இடமாற்றம்
- நீதி

## என்ஜிஓ பெயர்: ஜோஷ்

கலந்துரையாடலுக்காக தொகுக்கப்பட்ட விஷயங்கள்

கல்வி
- ஆரம்பக் கல்வி
- தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி
- உயர் கல்வி
- அணுகுவதில் உள்ள கவலைகள்— கல்விக் கடன் போன்றவை
- கல்வியின் ஆளுகை விவகாரங்களில் இளைஞர்களின் கண்காணிப்பு மற்றும் பங்கேற்பு
- கல்வித்திட்டத்தின் மறுவடிவமைப்பு - மரபுவழி அறிவுடன் ஆற்றல்மிக்க இணைப்புகள், வாழ்வாதாரம், சுகாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் ஆளுகை விவகாரங்களைச் சுற்றியுள்ள கவலைகளைச் சேர்த்துக் கொள்ளுதல்

சுகாதாரம்
- பொது மற்றும் ஆரம்ப சுகாதார அமைப்பு
- இனப்பெருக்கம்சார் சுகாதார பராமரிப்பு
- ஊட்டச்சத்தின் முக்கியத்துவம்
- தொழில்சார் அபாயங்களுக்கான சிறப்பு ஏற்பாடு
- சுகாதாரம் மற்றும் கல்வியைச் சுற்றியுள்ள கவலைகளின் ஆற்றல்மிக்க இணைப்புகள்
- ஆளுகை
- இளைஞர்களின் பங்கேற்பு மற்றும் ஈடுபாடு
- ஒட்டுமொத்த இளைஞர் கொள்கை
- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பேற்றல் நடவடிக்கைகள்
- பன்முகமாக்கல்

வளர்ச்சி மற்றும் வாழ்வாதாரம்
- இளைஞர்களுக்கான ஒட்டுமொத்த கொள்கையாக தன்னார்வத்தன்மையை உயர்த்துதல்
- வாழ்க்கைத் திறன்கள் பயிற்சி மற்றும் கல்வியுடன் ஆற்றல்மிக்க இணைப்பு
- புலப்பெயர்வின் பிரச்சனைகள் மற்றும் கவலைகள்
- இளைஞர்களுக்கான சமூக பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு வலைகள்
- மரபுவழி அறிவு மற்றும் உள்ளூர் சந்தையுடன் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார இணைப்புகள்
- தொழில் முனைவர்களை மேம்படுத்துதல்

சுற்றுச்சூழல்
- நிலைத்ததன்மை கொண்ட முன்னேற்றம்
- சுற்றுச்சூழல் மற்றும் கல்வியின் நிலைத்ததன்மை கொண்ட செயல்முறைகளின் அறிவாற்றலுக்கிடையில இணைப்பு.

## என்ஜிஓ பெயர்: ப்ரவாஹ் (வட கிழக்கு மாநிலங்கள் மற்றும் கிழக்கு மாநிலங்கள் ஒன்றுசேர்ந்தது)

கலந்துரையாடலுக்காக தொகுக்கப்பட்ட விஷயங்கள்

இளைஞர்
- ஓர் அடையாளத்தை உருவாக்கி, தனித்தன்மையுடன் இருப்பதற்கான தேவை
- தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான ஒரு தளம்∴ ஆளுகையில் கேட்கப்படுதல்
- வாழ்க்கை தொடர்பான முடிவுகள், வாழ்க்கைத் தொழில் தேர்வுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் மற்றும் வெளிப்பாடு
- இளைஞர்கள் மீது கவனம் செலுத்தும் உள்ளடங்கிய ஆளுகை

- விளையாட்டுக்கள், விளையாட இடம் மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகள் இல்லாமை
- பாலியல் கல்வி
- வழிகாட்டுதல், ஆலோசனை வழங்கல் (மார்கதர்ஷன்)இயதார்த்த வாழ்க்கையைக் கையாளுதல்
- ஏற்கப்படுவதற்கான தேவை
- பாதுகாப்பு மற்றும் மரியாதை
- பெருமளவிலான விழிப்புணர்வு

கல்வி

- கல்வியை அணுகும் வசதி
- அனைவராலும் இயலக்கூடிய மற்றும் அணுகக்கூடிய உயர் கல்விக்கான தேவை
- வாழ்வாதாரம்.'.வேலைவாய்ப்பு.'. வாழ்க்கைக்குத் தயார் செய்கின்ற கல்வி
- பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாமை
- பாடத்திட்டத்தில் ஒழுக்க நெறிகள் சேர்க்கப்படுதல்
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உதவித்தொகை வசதிகள்

சுகாதாரம்

- மனநலப் பிரச்சனைகளுக்கு இருப்பவை உட்பட, தரமற்ற மருத்துவ வசதிகள்
- மலேரியா மற்றும் ஹெச்ஐவி
- சுகாதார சேவைகளை அணுகும் வசதி
- மகப்பேறுசார் சுகாதாரம்
- தரமான உடல்நல பராமரிப்பை அணுகும் வசதி
- சுகாதார வசதிகள் நன்றாக செயல்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்

- அமைதி
- ஊடுருவல்.'. தீவிரவாதத்தில் ஈடுபடுவதற்கு மக்கள் நிர்ப்பந்தப்படுத்தப்படுகின்றனர்
- நக்சல்பாரி.'. தீவிரவாதி, மிரட்டிப் பணம் பறித்தல் மற்றும் வன்முறை
- இளம் வயதினரின் வாழ்க்கை மற்றும் உலகக் கண்ணோட்டத்தின் மீது வன்முறை ஏற்படுத்தும் தாக்கம்
- அன்றாட வாழ்க்கை மீது தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், பல்வேறு அமைப்புகள் மீது அரசியலின் தாக்கம்.
- தனிநபர் உரிமைகள் மற்றும் சமத்துவத்தை ஏற்றல்

பாலினம்

- பாகுபாடு
- பாலின பாகுபாடு
- பாலினக் கூருணர்வு கொண்ட சமுதாயத்திற்கு ஊக்கமளிப்பதில் ஊடகங்களின் பங்கு
- புலப்பெயர்வு மீதான கட்டுப்பாடுகள் (குறிப்பாக இஸ்லாமிய சமூகப் பெண்களிடையே)
- குழந்தைத் திருமணம்
- ஜாதி, பழங்குடி அடிப்படையில் பாகுபாடு.'. குறைபாடு
- திருமணம் குறித்த தேர்வுகளில் சுதந்திரம் இல்லாமை.'.குடும்பம், சமூகத்தின் நிர்ப்பந்தம்
- இழிதொழில்
- முடிவெடுக்கும் செயல்முறையில் பெண்களும், சிறுமிகளும் சேர்த்துக் கொள்ளப்படுதல்
- இயங்குகின்ற சுதந்திரம்
- மனப்போக்கில் மாற்றம்

பசி மற்றும் வறுமை

- வன்முறை
- குடிப்பழக்கம்
- அடிப்படைத் தேவைகளான உணவு, உடைகள் மற்றும் உறைவிடம்
- நிலக் கையகப்படுத்துதல் காரணமாக கிராம மக்களின் இடமாற்றம்
- விவசாயிகளின் தற்கொலைகள்
- நிலக் கையகப்படுத்துதல்
- நகர்ப்புறங்களுக்கு புலப்பெயர்வு
- இயற்கை வளங்களான நீர், விறகு, நிலம் போன்றவற்றை அணுக முடியாமை
- அனைவருக்கும் வேலை உத்தரவாதம்
- குடிப்பழக்கத்தையும், போதைமருந்திற்கு அடிமையாவதையும் நிறுத்துவதற்கான விழிப்புணர்வு

சுற்றுச்சூழல்

- காடுகளை அழித்தல்
- பாதுகாப்பான குடிநீர் இல்லாத நிலை
- மோசமான துப்புரவு அமைப்பு
- பெருமளவில் விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் சுற்றுச்சூழல் விவகாரங்கள் குறித்த இயக்கங்கள்

ஆளுகை

- மேலும் சிறந்த ஆளுகைக்கான தேவை
- கிராமங்களின் பஞ்சாயத்து அளவில்

மக்கள்.'.இளைஞர்களுக்கு முக்கியத்துவம் இல்லாமை
- பெண்களின் பாதுகாப்பு மற்றும் பத்திரத்தன்மைக்கு எதிரான வன்முறை தொடர்பான ஆற்றல்மிக்க சட்டத்தை ஆற்றலுடன் செயல்படுத்தாத தன்மை
- ஊழலற்ற உலகம்
- துரிதமான மற்றும் நியாயமான நீதி முறை

சமத்துவம்
- சரிசம விநியோகம் மற்றும் திட்டங்களை அணுகும் வசதி
- கல்வி மூலம் வேற்றுமையை மதிப்பதற்கு ஊக்கமளித்தல்
- பாகுபாட்டிற்கு எதிரான கடுமையான சட்டங்கள்

வேலைவாய்ப்பு
- திறன்கள் மற்றும் ஆளுமை வளர்ச்சிக்கான பயிற்சி மையங்கள்
- தொழில் முனைவுத்திறனை மேம்படுத்துதல்
- திறன்களுக்கான தொழில்நுட்பக் கல்வி
- வாழ்க்கைத்தொழில் வழிகாட்டுதல்

மக்கள்தொகை
- குடும்பக் கட்டுப்பாடு

## என்ஜிஓ பெயர்: தி ஒய்பி ∴பவுண்டேஷன்

கலந்துரையாடலுக்காக தொகுக்கப்பட்ட விஷயங்கள்

- முடிவெடுக்கும் செயல்முறையில் இயம் வயதினர் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை
- தற்போதுள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழல், மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதில்லை
- தற்போதுள்ள சமூகக் கட்டமைப்பினால் உறுதிசெய்யப்பட்ட ஜாதி, வகுப்பு மற்றும் பாலினம் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வும் மற்றும் வேற்றுமை
- அமைப்பிலுள்ள ஊழல், பணி மெத்தனம் மற்றும் பொறுப்பேற்றல் இல்லாமை, ஆளுகை பிரச்சனைகளுக்கு வழிவகுத்தல்
- பெரும்பாலும் வேளாண்மை சார்ந்ததன்மை கொண்ட இந்தியா போன்ற நாடுகளில், இனிமேலும் வேளாண்மை ஒரு செயல்படுத்தக்கூடிய விருப்பத்தேர்வாக இல்லாதநிலை
- மக்கள்தொகை அதிகரிப்பு மற்றும் சாகுபடி நிலத்தில் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் காரணமாக வேளாண் நிலங்கள் குறைதல்
- குடிநீர் போன்ற இயற்கை வளங்கள் மிக அதிக விலையைக் கொண்டிருத்தல்
- நலன் மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு இல்லாமை
- வேளாண்மை மற்றும் உணவு பதப்படுத்துதலில் அதிக அளவு வேதிப்பொருட்கள் பயன்படுத்தப்படுதல்
- வரம்புக்குட்பட்ட ஆதாரங்களுடன் மக்கள்தொகை அதிகரித்தல்
- மேம்பாட்டுத் திட்டங்களைக் குறைபாடின்றி கண்காணிப்பதற்கும், செயல்படுத்துவதற்கும் ஆளுகை அமைப்பினால் இயலாதநிலை
- அதிகாரமுள்ளவர்கள் மற்றும் அதிகாரமற்றவர்களிடையே ஆதாரங்கள் சமமாக விநியோகிக்கப்படாத நிலை

## என்ஜிஓ பெயர்: தி ஒய்பி ∴பவுண்டேஷன்

கலந்துரையாடலுக்காக தொகுக்கப்பட்ட விஷயங்கள்

- கருப்பொருள் 1: ஆயிரமாண்டுக்கால மேம்பாட்டு கட்டமைப்பு, அதன் முன்னேற்றம் மற்றும் 2015-க்குப்பின் உள்ள மேம்பாட்டு செயல்முறையைப் புரிந்து கொள்ளுதல்.
- கருப்பொருள் 2: ஒன்பது கருப்பொருள்சார் பிரிவுகள் தொடர்பாக, இளம் வயதினரின் தகவல் அளவைக் குறிப்பெடுத்தல் (கிடைக்கும்நிலை, வளங்கள், அணுகும் வசதி மற்றும் தரம்).
- கருப்பொருள் 3: தகவல் மற்றும் சேவைகள் - ஒன்பது கருப்பொருள் சார்ந்த கண்காணிப்பு தொடர்பான இளம் வயதினரின் தேவைகளை விவரித்தல்
- கருப்பொருள் 4: கல்வி, வாழ்வாதாரம், வாய்ப்புகள், உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம், பாதுகாப்பு (முரண்பாடு மற்றும் புலப்பெயர்வு) ஆகியவற்றை அணுகும் வசதியை உறுதி செய்வதற்காக சுற்றுச்சூழல்சார் தடைகள் மற்றும் உதவிகளைப் பகுப்பாய்வு செய்யும் அதே நேரத்தில், இளம் வயதினர் வாழ்ந்துவரும் சுற்றுச்சூழல்சார் தன்மையையும் பதிவுசெய்தல்
- கருப்பொருள் 5: இளம் வயதினருக்குக்

கிடைக்கும் சேவைகளை அனுபவம் சார்ந்த முறையில் பகுப்பாய்வு செய்தல்.

- கருப்பொருள் 6: ஏற்றத்தாழ்வுகளின் கட்டமைப்பிற்குள் உள்ள முக்கியமான இடைவெளிகளை அடையாளம் காணல் - எந்தப் பிரச்சனைகள் விடுபட்டுள்ளன, தற்போதுள்ள முன்னேற்றச் செயல்முறையில் விடுபட்டுள்ள நபர்கள் யார் என்பதைக் கண்டறிதல் மற்றும் எதிர்கால மேம்பாட்டு நிரலுக்கான தங்கள் கனவுகள் மற்றும் தொலைநோக்குகளை வெளிப்படுத்துவதற்கு இளம் வயதினருக்கு உதவுதல்
- கருப்பொருள் 7: ஆளுகை — ஆளுகையில் இளைஞர்களின் பங்கேற்பு
- கருப்பொருள் 8: தங்களுக்கான ஒரு தொலைநோக்கைப் பரப்புதல், இந்தியாவிற்கான 2015-க்குப்பின் மேம்பாட்டுக் கட்டமைப்பில், இளம் வயதினர் எவ்வாறு பார்க்கப்பட வேண்டுமென்று விரும்புகின்றனர்?
- கருப்பொருள் 9: ஒரு பொதுவான கருத்தொற்றுமையை உருவாக்குதல் - 2015-க்குப்பின் இருக்க வேண்டிய முக்கிய பணிகள் மற்றும் நிலைகாட்டிகளை பரப்புதல்

## சூழ்நிலை

நாட்டின் மக்கள் தொகையில் 31 சதவீதமாக உள்ள, 10-24 வயதுப் பிரிவில் இடம்பெற்றிருக்கும் 358 மில்லியன் என கணக்கிடப்பட்டுள்ள மக்களுக்கு (2011 இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பு), இந்தியா வாழ்விடமாக உள்ளது. இக்குழு, சமூக-பொருளாதாரப் பிரிவுகளில் இந்தியாவின் எதிர்காலத்தைப் பிரதிபலிப்பதாக இருப்பது மட்டுமின்றி, அதன் அனுபவங்கள், தனது மக்களியல்சார் நன்மைகளை[1] இந்நாடு எந்த அளவிற்கு பயன்படுத்திக் கொண்டு, மில்லெனியம் மேம்பாட்டு இலக்குகள் (MDGக்கள்) மற்றும் 2015-ல் அமலுக்கு வரவிருக்கும் கட்டமைப்பை அடைய இயலும் என்பதையும் பெருமளவில் நிர்ணயிக்கும்.

மக்களியல்சார் நன்மைகள் மற்றும் மாறிவரும் அதிகார அமைப்புகளுடன், இந்தியாவின் குரல், உலகத் தளத்திலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. எனவே, அதிகரித்துவரும் இந்த இளைய தலைமுறை மக்கள்தொகையானது, நாட்டின் மீது மட்டுமின்றின் உலக அளவிலும் பல வழிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். உள்நாட்டு மொத்த உற்பத்தியை (GDP) அதிகரிப்பதற்காக, பணிக்குழுவை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் மட்டுமே இளைஞர்களைக் காண்பது என்பது மிகவும் குறுகிய கண்ணோட்டமாக இருப்பதுடன், அதிகரிக்கும் வேலையில்லா திண்டாட்டத்தைத் தவறவிட்டுவிடுகிறது. இளம் வயதினரிடையே ஒரு சில பிரிவுகள் மற்றும் அவர்கள் எதிர்கொண்டுள்ள குறிப்பிடத்தக்க ஆனால் மிகக் குறைவான பிரச்சனைகள் மீது மட்டும் கவனம் செலுத்துவதன் மூலம் ஆனுபுக்களும் ஓர் எதிர்மறையான பங்கினையே வகித்துள்ளனர். இது, சுகாதாரம் அல்லது கல்விக்கான திட்டங்களினால் நன்மையடைபவர்களாக மட்டுமே இளைஞர்கள் பார்க்கப்படுவதற்கு வழிவகுத்துள்ளது.

நாங்கள் மேற்கொண்ட ஒவ்வொரு ஆலோசனையின்போதும், ஓர் ஒருமித்த கருத்தாக இருந்தது “இளைஞர்களின் குரல்கள் கேட்கப்படுவதில்லை” என்பதாகும். அவர்கள் சரிசம கூட்டாளர்களாக, சம்பந்தப்பட்டவர்களாக மற்றும் முடிவு எடுப்பவர்களாகப் பார்க்கப்படுவதில்லை, புரிந்துகொள்ளப்படுவதில்லை அல்லது மதிக்கப்படுவதில்லை. இக்கருத்திற்கு ‘வயதுவந்தோர்’, திறமையான முடிவுகள் மற்றும் தகவலறிந்து தேர்வுகளைச் செய்கின்ற திறன்கள் மற்றும் ஆற்றல்கள் இளம் வயதினரிடம் இல்லை என்று சுட்டிக்காட்டி எதிர்வாதம் செய்கின்றனர். இருப்பினும், சுயவிழிப்புணர்வு, நெறி அடிப்படையிலான தலைமைத் திறன்கள், தகவல் பரிமாற்றத் திறன்கள், மக்களைத் தூண்டி அவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துதல், தகவலறிந்த தேர்வுகளைச் செய்தல், தோல்வியைக் கையாளுதல், வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருத்தல், உண்மையான உறவுகளை உருவாக்கும் திறன் பெற்றிருத்தல் மற்றும் அமைப்புகளுக்கு ஆதரவளித்தல், பேச்சுவார்த்தை திறன்கள், முரண்பாட்டைத் தீர்க்கும் திறன்கள் போன்ற பொருந்தும் திறன்களை வளர்க்கும் வாய்ப்புகள் மற்றும் பாதுகாப்பான முறைகள் மூலம்

[1] Demographic Dividend: By 2020 India will be the youngest country in the world with an average age of 29 years.
*Source:* http://www.youthportal.gov.in/statistics/demographicdetails.htm

இளம் வயதினருக்கு ஆற்றலளிக்கப்படுவதை உறுதிசெய்கின்ற உலகளாவிய முயற்சி ஏதும் இல்லை. தவறுகள் செய்வதற்கான வாய்ப்புகள் ஏதுமில்லாத நிலையில், இளம் வயதினர் எவ்வாறு கற்பார்கள்? இன்றும் நாளையும் மாற்றங்களை ஏற்படுத்துபவர்களாக அவர்களால் எவ்வாறு மாறமுடியும்?

ஃபேஸ்புக் மற்றும் டுவிட்டர் ஆதிக்கம் செலுத்தும் இணையம் சார்ந்த இந்த யுகத்தில், முந்தைய தலைமுறைகளைக் காட்டிலும் இன்றைய இளம் வயதினர் உலகுடன் தங்களை நன்றாக இணைத்துக் கொண்டும், இசைவுடனும் வாழ்கின்றனர். அரசியல் முதல் சுற்றுச்சூழல் வரை அதிக அளவில் முரண்பாடுகள் நிறைந்த, அதிவேக வளர்ச்சி கண்டுவரும் உலகில், அவர்கள் மிக வேகமாக வளர்கின்றனர். இந்நிலையில், உலக அளவிலும், தேசிய அளவிலும் ஒருவித விரக்தியுணர்வு அதிகரித்து வருகிறது.

உலகைப் பொறுத்தவரை அதிர்ஷ்டவசமாக, இளம் வயதினர் தாங்கள் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை புதிய வழிகளில் கண்டு, உற்சாகத்துடனும், கற்பனைத் திறனுடனும் கையாள்கின்றனர். குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளிலுள்ள இளம் வயதினர், தங்கள் சமுதாயங்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நன்மைகளை மாற்றுகின்ற திறனுள்ளவர்களாக இருக்கின்றனர். சரியான முதலீடுகளுடன், இன்றைய இளம் வயதினரால், தனி மனிதர்களாக, தலைவர்களாக மற்றும் முன்னேற்றத்தின் தூதுவர்களாக தங்கள் முழு ஆற்றலையும் வெளிப்படுத்த முடியும். மேலும், உலகிற்கு அவர்களுடைய ஆற்றல், பங்கேற்பு மற்றும் திறன்கள் தேவை. ஆனால், இந்த உருமாற்றத்தை வழங்குவதற்கு, இளைஞர் தலைமைத்திறன் உருவாக்கம், தொழில்முனைவுத்திறன் மற்றும் வாழ்வாதாரம், அமைதி மற்றும் மனித உரிமைகள், சுகாதாரம், கல்வி, பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் உரிமைகள், நிலைத்ததன்மை கொண்ட முன்னேற்றம் மற்றும் உண்மையான குடிமக்கள்சார் ஈடுபாடு ஆகியவற்றின் மீது கூட்டு நடவடிக்கை அவசியமாகும்.

“என்ன நடக்கிறது என்பதை அறியவும், எங்களுக்கு எது நல்லது என்பதை முடிவு செய்யவும் நாங்கள் விரும்புகிறோம்.” இதுவே பல்வேறு இளைஞர் கலந்தாலோசனைகளில் உருவான ஒருமித்தக் கருத்தாகும். திட்டமிடுதலில் தொடங்கி, நிறைவேற்றுதல் வரையிலான முடிவெடுக்கும் செயல்முறையின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதற்கு இளம் வயதினர் விரும்புவதை இக்குரல் தெளிவாக எடுத்துரைக்கிறது.

எனவே, தலைவர்கள், முடிவெடுப்பவர்கள் மற்றும் மாற்றத்திற்கான தூதுவர்களாக அவர்களுடைய முழு மனித ஆற்றலையும் அவர்களால் பயன்படுத்த முடிவதை உறுதி செய்வதற்காக, இளம் வயதினருடன் மற்றும் அவர்களிடம் முதலீடு செய்வதற்கான தேவை எழுந்துள்ளது.

இது நடைபெறுவதற்கு, இன்னொரு தெளிவான பணியாக இருப்பது, முடிவெடுக்கும் அனைத்து நிலைகளிலும், சரிசம பங்காளர்களாக இளைஞர்களின் ஆற்றல்மிக்க பங்களிப்பு உறுதிசெய்யப்பட வேண்டும் என்பதாகும்.

இளைஞர்கள் முக்கியமானவர்கள் மற்றும் கலப்பு மரபுத்தன்மைக்கு உரிய மதிப்பளித்து, ஒரு குழுவாக அவர்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஜோஸ், ப்ரவாஹ், ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட், மற்றும் தி ஒய்பி ஃபவுண்டேஷன் ஆகியவற்றிலுள்ள நாங்கள், ஐந்து ஆலோசனைகள் மூலம், 23 மாநிலங்கள் மற்றும் ஒரு துணை மாநிலம் முழுவதிலும் உள்ள இளம் வயதினரைச் சென்றடைந்துள்ளோம். உள்ளூர், மண்டல, தேசிய மற்றும் சர்வதேசகச் சூழல்களில் இளம் வயதினருடன் ஈடுபடுத்திக் கொள்கின்ற எங்கள் கூட்டு அனுபவங்களின் மூலம் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

2015-க்குப்பின் கட்டமைப்பிற்கான எங்கள் பரிந்துரைகளை கீழ்க்கண்டவை கொண்டுள்ளன.

## கண்டறிந்தவை

பல்வேறு குழுக்களையும் சேர்ந்த பங்கேற்பாளர்கள், உணவுப் பாதுகாப்பு மற்றும் மக்கள்தொகை இயக்கவியல் மற்றும் ஏற்றத்தாழ்வு ஆகிய இரண்டு கருப்பொருட்களைப் பற்றி கலந்தாலோசிக்கவில்லை அல்லது முழுமையாகக் கலந்தாலோசிக்கவில்லை. இதற்கான காரணங்கள் வேறுபட்டவையாக இருக்கலாம்:

- இவ்விஷயம் குறித்த திறன் இல்லாமையாக இருக்கலாம், அல்லது
- இக்கருப்பொருட்களின் அர்த்தம் மற்றும் சூழ்நிலை குறித்து புரிந்து கொள்ளாதிருத்தல், அல்லது
- வரம்புக்குட்பட்ட திறனின் செயல்பாடு அல்லது நேரம் அல்லது இரண்டுமாகக்கூட இருக்கலாம்.

இப்பரிந்துரைகளைப் படிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு முக்கிய விஷயம், மேலும் பல யோசனைகள், ஏராளமான நிலைகாட்டிகளைப் பட்டியலிடுதல், ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் மீது தேவைக்கும் அதிகமாக நேரத்தைச் செலவிடுதல் ஆகியவை, அக்கருப்பொருள் முன்னுரிமை பெறுகிறது அல்லது முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பதாகாது. அத்தகைய வரம்பற்ற கலந்தாலோசனைகளை பல்வேறு அம்சங்கள் பாதிக்கலாம் - மண்டல சூழல் குறித்த சமீபத்திய செய்திகள் அல்லது ஊடக அறிக்கை அது அக்குழுவின் மனதில் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கலாம், அல்லது ஒரு நபர்.·.சில பங்கேற்பாளர்கள் அதிக அளவில் பேசி, கூட்டத்தின் கலந்தாலோசனையைத் தூண்டியிருக்கலாம், அல்லது அமர்வின் தொடக்கத்தில் அதிக நேரம் செலவிடப்பட்டு, நேரம் செல்லச் செல்ல, மீதமுள்ள பட்டியல்கள் மற்றும் விஷயங்களை அவசரமாக முடித்திருக்கலாம். இறுதியாக, நாளின் தொடக்கத்திலும், நாளின் முடிவிலும் மற்றும்.·. அல்லது நாள் ஒன்றின் தொடக்கத்திலும், நாள் மூன்றின் முடிவிலும் பங்கேற்பாளர்கள் அதே அளவு ஆற்றலுடன் இல்லாமல் இருந்திருக்கலாம்.

கவனத்தில் கொள்ள வேண்டிய மேலும் சில குறிப்புகள்:

- அனைத்து அம்சங்களும் கையாளப்படுவதை உறுதிசெய்வதில் கவனம் செலுத்தப்பட்டது, எனவே யோசனைகள் விஷயத்தில் மீண்டும் மீண்டும் சொல்லப்படுவது அனுமதிக்கப்பட்டது.
- சுலபக் குறிப்பிற்காக, வார்ப்புருவில் இல்லாத, ருடே-ஆல் வழங்கப்பட்ட புதிய அளவுருக்களின் தலைப்புகள், பெரிய எழுத்துக்களில் கொடுக்கப்பட்டுள்ளன.
- பிரச்சனைகள், கவலைகள், யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் இல்லாத அளவுருக்கள் விடப்பட்டன.
- தங்கள் தனிப்பட்ட பரிந்துரைகள் அறிக்கையில் என்ஜிஓ-க்களால் சமர்ப்பிக்கப்பட்டவாறே, அதே சொற்களில் உரை மறுஉருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

## முடிவுகள்

ஆலோசனையின் செயல்முறையை மதிப்பீடு செய்வதன் ஒரு பகுதியாக பின்வரும் அம்சங்கள் கண்டறியப்பட்டன

1. செயல்முறையைப் பொறுத்த வரையில், என்ஜிஓ பங்காளர்கள் வழிகாட்டல்கள் மற்றும் பகுப்பாய்வு அறிவுறுத்தல்களை ஒன்றுசேர்த்து, அவற்றைப் பின்பற்றினர்.
2. பரிந்துரைகளின் வரைவை உருவாக்குவதில், கட்டமைப்பையும் கடந்து செல்லும் சுதந்திரம் என்ஜிஓ-க்களுக்கு இருந்தது, ஆலோசனைக்கு உதவியாக அமைந்தது. அது அறிந்தே செய்யப்பட்டதா அல்லது இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாவிட்டாலும், புதிய கருபொருட்கள் மற்றும் அளவுருக்கள் தொடர்பாக கட்டமைப்பில் புதிய பரிமாணங்களைக் கொண்டுவர அது உதவியது.

இந்த ஆலோசனையிலிருந்து, 2015-க்குப்பின் மேம்பாட்டு நிரலுக்கான பரிந்துரைகளை தயவுசெய்து பட்டியலிடவும்.

“எத்தனை சிரமப்பட்டு முயற்சி செய்து நாம் திட்டமிட்டாலும், இப்பிரச்சனைகளை நாம் கையாளாவிட்டால், நம்மால் எங்குமே சென்றடைய முடியாது.” –(ரஸியாஇ 24 வயது, தமிழ்நாடு)

## இலக்குகள

1. முடிவெடுத்தலின் அனைத்து நிலைகளிலும் இளைஞர்களின் ஆற்றல்மிக்க பங்களிப்பை உறுதி செய்யவும்.
2. தலைவர்கள், முடிவெடுப்பவர்கள் .·.இன்றும் நாளையும் மாற்றத்திற்கான தூதுவர்களாக அவர்களுடைய முழு மனித ஆற்றலையும் அவர்களால் பயன்படுத்த முடிவதை உறுதி செய்வதற்காக, இளம் வயதினருடன் மற்றும் அவர்களிடம் முதலீடு செய்யவும்.

## பரிந்துரைகள்

மேலே பட்டியலிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்காக, பின்வரும் பரிந்துரைகளை நாங்கள் முன்மொழிகிறோம்:

1. ஐ. சரிசம வளர்ச்சி, வாழ்வாதாரங்கள் மற்றும் தொழில் முனைவு ஆகியவற்றை உறுதி செய்வதற்காக, இளம் வயதினரின் தொழில் மற்றும் வாழ்க்கைத்திறன்கள் மேம்பாடு மற்றும் குறிப்பிட்ட சூழல்சார் வாய்ப்புகளில் முதலீடு செய்தல்.
2. இளம் வயதினருடன் மற்றும் அவர்களுக்காக பொறுப்பேற்றலுடன், பதில்செயலாற்றக்கூடிய ஆளுகையை உறுதி செய்தல்
3. முரண்பாடு மற்றும் பாதிக்கப்படத்தக்க பிரிவுகளில் அமைதியை உருவாக்கும் செயல்முறைகளில், சமமான தொடர்புள்ளவர்களாக இளம் வயதினருக்கு ஆற்றலளித்து, ஈடுபடுத்துவதுடன், அவர்களுடைய மனித உரிமைகளைத் தூக்கி நிறுத்துதல்.
4. பள்ளியிலுள்ள மற்றும் வெளியேயுள்ள விடலைப்பருவத்தினர் மற்றும் இளம் வயதினரின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்காக, அனைத்தும் அடங்கிய, பொருத்தமான, உட்படுத்தும் கல்வியை அனைவராலும் அணுக முடிவதை உறுதி செய்தல்.
5. இளம் வயதினர் அனைவரின் ஒட்டுமொத்த ஆரோக்கியம், நலன் மற்றும் உரிமைகளை உறுதி செய்கின்ற அனைத்தும் அடங்கிய, இளைஞர்களுக்கு உகந்த தகவல்கள், சேவைகள் மற்றும் உதவிக் குழுக்களை அணுகும் வசதி.
6. பாலினம் (மூன்றாவது பாலினம் உட்பட), ஜாதி, வகுப்பு, மதம் மற்றும் குறைபாடு அடிப்படையிலான அவமரியாதை, வன்முறை, பாகுபாடு மற்றும் ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல்.
7. வேளாண்மை, உற்பத்தி மற்றும் தயாரிப்புகளில் ஆராய்ச்சி செய்து, மேம்படுத்தி மற்றும் உள்நாட்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த செயல்முறைகளைப் பாதுகாப்பதன் மூலம், சுற்றுச்சூழல் சார்ந்த முறையில் நிலைத்ததன்மை கொண்ட செயல்முறைகளை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்.

பின்வரும் அட்டவணையில், இப்பரிந்துரைகள் ஒவ்வொன்றுக்குமான யுக்திகள் மற்றும் நிலைகாட்டிகளை நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம்:

| பரிந்துரைகள | இடைவெளிகள் | யுக்திகள் | நிலைகாட்டிகள் |
|---|---|---|---|
| ஐ. சரிசம வளர்ச்சி, வாழ்வாதாரங்கள் ஆகியவற்றை உறுதி செய்வதற்காக, இளம் வயதினரின் தொழில் மற்றும் வாழ்க்கைத்திறன்கள் மேம்பாடு மற்றும் குறிப்பிட்ட சூழல்சார் வாய்ப்புகளில் முதலீடு செய்தல்.<br><br>“நான் ஒரு பயிற்சி பெற்ற ஆசிரியராக இருந்தாலும், வேலை ஏதும் கிடைக்கவில்லை, மற்றும் தகுதி குறைவாக உள்ளவர்களுக்கு ஊழல் காரணமாக வேலை கிடைக்கிறது.” ஆண், 25 வயது, ஜம்மு மற்றும் காஷ்மீர் | இளைஞர்களுக்கு வாழ்க்கைத்தொழில் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வசதிகள் இல்லாமை<br><br>கீழ்க்கண்டவற்றிற்கான தகவல்கள் மற்றும் வளங்களை அணுக, சென்றடைய முடியாதநிலை<br>ய) வேல மற்றும் தொழில்முனைவுக்கான வாய்ப்புகள்<br>டி) தகவலறிந்த முடிவுகள் மற்றும் தேர்வுகளைச் செய்வதற்கான உதவிக் குழு (வழிநடத்துவோர்)<br>உ) பயிற்சி மற்றும் மேம்பாட்டிற்கான வாய்ப்புகள் (உயர் கல்வி உட்பட)<br>ன) கடன் வசதிகள் | அறிவாற்றல், பயிற்சி, நிதிசார் மற்றும் நிதிசாரா வளங்களை அணுகுவதற்கு “ஒற்றைச் சாளர” வசதியாக செயல்படும் பொருட்டு, பஞ்சாயத்து நிலை முதல் மேலும் உயர்நிலையிலிருந்து ஆலோசனை மற்றும தகவல் மையங்களை அணுகும் மற்றும் சென்றடையும் வசதி<br><br>நிதியுதவிக்கு சுலபமான அணுகும் வசதியை வழங்குதல் (குறிப்பாக, சுய உத்தரவாத அடிப்படையில் முதல் முறையாகக் கடன் பெறுவதற்கு உதவுதல்)<br><br>வெற்றிகரமான முன்மாதிரிகளை காட்சிப்படுத்துவது உள்ளிட்ட, வேளாண்- சார்ந்த வேலைவாய்ப்பு மற்றும் மரபுவழி அறிவாற்றல் அடிப்படையிலான வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவு வாய்ப்புகள் | மையங்களின் எண்ணிக்கை மற்றும் இம்மையங்களை அணுகும் மக்கள் எண்ணிக்கையின் அதிகரிப்பு<br><br>நிறுவப்பட்ட மையங்களின் எண்ணிக்கை, வழங்கப்படும் சேவைகளின் அளவு மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் இளைஞர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு.<br><br>கடன் பெறும் இளம் வயதினரின் எண்ணிக்கை அதிகரிப்பு.<br><br>சொந்த மண்டலத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மற்றும் வேலையிலுள்ள |

| பரிந்துரைகள | இடைவெளிகள் | யுக்திகள் | நிலைகாட்டிகள் |
|---|---|---|---|
| | உள்ளிட்ட நிதி ஆதாரங்கள்<br>ந) அரசுத் திட்டங்கள் ஆதரவு இல்லாமை மற்றும் நகர்ப்புற தேர்வுகளுக்கு ஏற்பட்டுள்ள அதிக முக்கியத்துவம் காரணமாக, வேளாண்மை போன்ற மரபுவழி வாழ்வாதாரங்களைவிட்டு வெளியேறுவதற்கு இளைஞர்கள் நிர்ப்பந்தப்படு-த்தப்படுவதால், அதிகரித்த வேலையின்மை மற்றும் புலப்பெயர்வு.<br><br>வாய்ப்புகளின் கிடைக்கும்நிலை மற்றும் அப்பதவிகளை நிரப்பும் இளம் வயதினரின் திறமை ஆகியவற்றிற்கு இடையிலான இடைவெளிக்கு, தொழிலின் வன்திறன்கள் மீது மட்டுமே கவனம் செலுத்தப்பட்டு, ஒரு நல்ல மனிதர் மற்றும் செயல்பாடுமிக்க குடிமகனுக்கான நெறிகள், நல்லொழுக்கம் மற்றும் மென்திறன்கள் மீது கவனம் செலுத்தாமல் இருப்பதே காரணமாகும். | மீதான அறிவாற்றல் மற்றும் திறன்களை அதிகரிப்பதன் மீது கவனம் செலுத்தும் தொழிற்கல்வி பாடப்பயிற்சிகளை வடிவமைத்தல்.<br><br>சமூக மாற்றத்திற்கான திட்டங்கள் மற்றும் குழுக்களுடன் தன்னார்வப் பணியில் ஈடுபடும் வாய்ப்பின் மூலம் பணித்தகுதி திறன்கள், நெறி அடிப்படையிலான தலைமைக்கான திறன்கள், சுய விழிப்புணர்வு, கூட்டு, முடிவெடுத்தல் போன்றவற்றை ஒருங்கிணைக்கும் கல்வி பாடத்திட்டம்.<br><br>சுய விழிப்புணர்வு, நெறி அடிப்படையிலான தலைமை, தகவல் பரிமாற்றம் போன்ற திறன்கள், மக்களைத் தூண்டி ஊக்கப்படுத்தும் திறன்கள், தகவலறிந்த தேர்வுகளைச் செய்தல், தோல்விகளைக் கையாளுதல், உண்மையான உறவுகளை உருவாக்கி, அமைப்புகளுக்கு ஆதரவளிக்கும் திறன், பேச்சுவார்த்தைத் திறன்கள் மற்றும் முரண்பாட்டிற்குத் தீர்வு காணும் திறன்கள் போன்ற வாழ்க்கைத் திறன்களை எல்லா தொழிற்கல்விப் பயிற்சித் திட்டங்களும் ஒருங்கிணைக்க வேண்டும்.<br><br>ஒழுங்கமைக்கப்படாத பிரிவில் பணியாற்றும் இளம் வயதினருக்கு சமூக பாதுகாப்பு வழங்குதல்.<br><br>தொழிற்கல்வி வாய்ப்புகளை அதிக அளவில் அணுக முடிதல், குறிப்பாக, பள்ளியைவிட்டு வெளியேறியவர்கள், இளவயதில் பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்டவர்கள் மற்றும் விடலைப்பருவத்தினருக்கான “இரண்டாவது வாய்ப்புகள்”. | இளைஞர்களின் எண்ணிக்கை (புலப்பெயர்வின் குறைந்த சதவீதம்)<br><br>இளம் வயதினரில் 40மூ தங்கள் வாழ்வாதாரத்தை, சொந்த நிறுவனங்களை அமைப்பதன் மூலம் ஈட்டுகின்றனர் மற்றும் அம்மண்டலத்தின மூ பொருளாதார வளர்ச்சி<br><br>வேளாண்- சார்ந்த மற்றும் மரபுவழி அறிவாற்றல் அடிப்படையிலான தொழில்கள் மற்றும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள இளம் வயதினரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.<br><br>வேலையில், பணிவிலகும் விகிதங்கள் குறைதல்.<br><br>சமூக நலனை அணுகும் இளம் வயதினரின் எண்ணிக்கை அதிகரிப்பு |

| பரிந்துரைகள | இடைவெளிகள் | யுக்திகள் | நிலைகாட்டிகள் |
|---|---|---|---|
| 2. இளம் வயதினருடன் மற்றும் அவர்களுக்காக பொறுப்பேற்றலுடன், பதில்செயலாற்றக்கூடிய ஆளுகையை உறுதி செய்தல்<br><br>“திட்டமிடல் முதல் கண்காணித்தல் வரை - ஆரம்பம் முதல் முடிவு வரை எங்களை ஈடுபடுத்துவதை நாங்கள் விரும்புகிறோம்.”<br>கன்சென்ஸஸ் யூத் கன்சல்டேஷன், ராஜஸ்தான்<br><br>"இளம் வயதினரை வயது வந்தோரிடமிருந்து ஒரு பெரிய கோடு வேறுபடுத்துகிறது. இளம் வயதினர் தங்களுக்கு இடங்களின் அறிவாற்றல் இருக்கும்போது அதற்குள்ளாக ஈடுபட்டு, மாற்றத்தை உருவாக்குபவர்களாக செயல்பட்டு, ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த விரும்புகின்றனர். அத்தகைய வாய்ப்புகள், எதிர்காலம் குறித்த நம்முடைய அதீத ஆர்வங்கள், கனவுகள் மற்றும் நம்பிக்கைகளுடன் தொடர்புள்ளவை...”<br>பெண், 20 வயது, சண்டிகர் | கொள்கைகளில், முடிவெடுத்தலை அணுகுவதற்கு இளம் வயதினருக்கு வாய்ப்பில்லாமை<br><br>ஆளுகையில் இளம் வயதினரின் குரல் ஒலிக்காத நிலை (கொள்கை உருவாக்கம் முதல் செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு வரை)<br><br>அத்தியாவசிய சேவைகளை அணுகுவதற்கான ஆற்றல் மிக்க இளைஞர்களுக்கு உகந்த குறைதீர் அமைப்பு (துரிதமான மற்றும் நியாயமான நீதி வழங்கும் முறை) இல்லாமை<br><br>ஆற்றல் மிக்க, வெளிப்படையான மற்றும் பொறுப்பேற்கும் ஆளுகை அமைப்பு இல்லாமை. திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு இல்லாமை<br><br>பாதுகாப்பு மற்றும் பத்திரத்தன்மை இல்லாமை | உள்ளூர் அதிகார அமைப்புகளில் தொடங்கி, தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளில் இளைஞர்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்தல்.<br>விளையாட்டு அமைச்சகத்திலிருந்து இளைஞர்கள் அமைச்சம் தனியாகப் பிரிந்திருக்க வேண்டும்<br>தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இளம் பிரதிநிதிகளுக்கு வழிகாட்டும் திட்டம்<br>தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள், இளம் பயிலுனர்களை பணியமர்த்த வேண்டும்.<br>மத்திய இளைஞர் கொள்கை உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும்.<br><br>அனைத்துக் கொள்கைகள், திட்டங்கள மற்றும் சட்டங்களில் இளைஞர்களுக்கான தனி நிதி ஒதுக்கீடு இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.<br>தகவல்களை முனைப்புடன் (சுவோமோட்டோ) வெளியிடுதல்<br>உள்ளூர் சமுதாயத்திலிருந்து இளம் வயதினரின் பிரதிநிதித்துவம் மற்றும் பங்கேற்புடன், கண்காணிப்பை முறைப்படுத்துதல்.<br>சட்டங்கள், கொள்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், கருத்துக்கள் மற்றும் யோசனைகளை வரவேற்பதற்கும், ஊடகங்கள் மற்றும் இணையதளத்தைப் பயன்படுத்தி, தளங்களை உருவாக்குதல்.<br>இளைஞர்களின் கவலைகளைக் கையாள்வதற்கு ஒரு சர்வதேச இளைஞர் குழுவை உருவாக்குதல்<br>இளைஞர்களை ஒரு சிறப்பு கவனத்திற்குரிய குழுவாக ஐநா அங்கீகரித்து, இளைஞர் ஆலோசனை வாரியம் ஒன்றை உருவாக்க வேண்டும்<br>இளம் வயதினருக்கு, குறிப்பாக பாதிக்கப்பட்ட குழுக்களிலிருந்து வருவோருக்கு இலவச சட்ட உதவி ஆதரவை அமைப்பு கிடைத்தல் மற்றும் அணுகும் வசதி இருத்தல்<br>மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் | ஆளுகையின் அடிமட்ட நிலையிலும், தேசிய அளவிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களின் சதவீதம், வேறுபாட்டை உள்ளடக்குவதாக இருக்க வேண்டும்.<br><br>கண்காணிப்புக் குழுக்கள் அனைத்துமே இளைஞர் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.<br><br>அத்தகைய கோரிக்கைகளுக்கு பதில் செயலாற்றும் இளைஞர்களின் எண்ணிக்கை<br><br>இளைஞர்களின குரல்களை ஒருங்கிணைக்கும் கொள்கைகளின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும்.<br><br>பஞ்சாயத்து அல்லது மாவட்ட அளவில் அல்லது லோக் அதாலத்களில் கையாளப்படும் வழக்குகளின் எண்ணிக்கை. உயர் நீதி மன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை குறைதல்.<br><br>சுவஜ போன்ற சட்டங்கள் மற்றும் கொள்கைகளைப் பயன்படுத்துகின்ற மற்றும் சமூக தணிக்கைகளில் பங்கேற்கின்ற இளம் வயதினரின் எண்ணிக்கை அதிகரிப்பு.<br><br>தங்கள் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் சட்டங்கள், திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் வடிவமைப்பு, அமலாக்கம் மற்றும் கண்காணிப்பில் பங்காளராக, முனைப்புடன் ஈடுபடும் இளைஞர்களின் எண்ணிக்கை. |

| பரிந்துரைகள | இடைவெளிகள் | யுக்திகள் | நிலைகாட்டிகள் |
|---|---|---|---|
| | | அரசுத் திட்டங்கள் அனைத்தையும் மேற்பார்வையிடும் மாவட்டக் கண்காணிப்புக் குழுவில் இளம் வயதினர் சேர்க்கப்பட வேண்டும்<br>இளம் வயதினரின் பிரதிநிதித்துவத்துடன், கிராம சபாக்களின் காலாண்டுக் கூட்டங்கள் | |
| 3. முரண்பாடு மற்றும் பாதிக்கப்படத்தக்க பிரிவுகளில் அமைதியை உருவாக்கும் செயல்முறைகளில், சமமான தொடர்புள்ளவர்களாக இளம் வயதினருக்கு ஆற்றலளித்து, ஈடுபடுத்தி, அவர்களுடைய மனித உரிமைகளைத் தூக்கி நிறுத்துதல்.<br><br>“முரண்பாடு மற்றும் பாதிக்கப்படத்தக்க தன்மையிலிருந்து நாம் விலகுவோம், ஆனால் அமைதிக்காக பணிபுரிவோம்.” ஆண், 20 வயது, அசாம்<br><br>“வட-கிழக்கு மண்டலத்தில் பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டிற்கான வாய்ப்புகள் இளைஞர்களுக்கு இல்லை... இம்மண்டலத்தின் இளைஞர்கள் மீது “தீவிரவாதிகள்” முத்திரை குத்தப்பட்டுள்ளது!” ஆண், 21 வயது, மணிப்பூர் | அனைத்து எல்லைகளிலிருந்தும், வேறுபட்ட அடையாளங்கள் மற்றும் சூழல்களிலிருந்து வரும் இளம் வயதினர் பரஸ்பர பிரச்சனைகளை வெளிப்படையாகப் பகிர்ந்து மற்றும் புரிந்து கொள்வதற்கான தளங்கள் இல்லாமை.<br><br>கல்விப் பாடத்திட்டத்தில், வேறுபட்ட தொலைநோக்குகள் இல்லாமை.<br><br>அமைதி உருவாக்க செயல்முறைகளில் ஒரு பங்காளரின் பங்கினை வகிக்க அனுமதிக்கப்பட வேண்டிய இளம் வயதினரிடம் முதலீடு இல்லாமை.<br><br>வாழ்க்கை, பாதுகாப்பு, விளையாட்டு போன்றவை உள்ளிட்ட அடிப்படை மனித உரிமைகளை அணுகுதல் இல்லாமை.<br><br>அடிப்படை மற்றும் அவசியமான சேவைகளை அணுக முடியாமை<br><br>வாழ்வாதாரம், தொழில்முனைவு, உயர் கல்விக்கான தகவல்கள் மற்றும் வாய்ப்புகளை அணுக இயலாமை மற்றும் சென்றடைவதில் பிரச்சனை உள்ளது. | □மற்றவரை□ புரிந்து கொள்வதற்கு, எல்லைகளுக்கிடையில் பாதுகாப்பான கணிப்புசாரா இடங்களை உருவாக்குதல், அமைதியான சூழ்நிலையில், ஆழ்ந்த உறவுகளை உருவாக்குவதற்கு, கற்பனைத்திறன்மிக்க, ஆக்கபூர்வமான அனுபவங்கள் தேவை.<br><br>கல்விப் பாடத்திட்டத்தில், பல்வேறு சூழல்களிலிருந்து சமூக-கலாச்சார தொலைநோக்குகள் சேர்க்கப்பட வேண்டும்.<br><br>அமைதி உருவாக்கத் திறன்களில் (பேச்சுவார்த்தை, மத்தியஸ்தம், பிரச்சனைகளின் பகுப்பாய்வு) இளம் வயதினருக்கு பயிற்சி அளிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.<br><br>அமைதி உருவாக்க முடிவெடுத்தல் செயல்முறைகள் மற்றும் குழுக்களில், இளைஞர்களின் பிரதிநிதித்துவம் கால் பங்கு இருப்பதை உறுதி செய்தல்.<br><br>எல்லைப் பகுதி சச்சரவுகள், சட்டவிரோத ஆயுத விநியோகம், ஆகிய சர்வதேச மற்றும் தேசிய பிரச்சனைகளை அவசரமாகக் கையாளுதல், தனி சச்சரவுகள் சமுதாய கலகங்களாக மாறாதிருப்பதை உறுதி செய்வதற்காக சட்டம் மற்றும் ஒழுங்கை பலப்படுத்துதல் மற்றும் போர்க்குணத்தை நீக்குதல்.<br><br>பாதிக்கப்படத்தக்க மண்டலங்களில், இளைஞர்கள் மேம்பாட்டின் மீது சிறப்புக் கவனம். | பல்வேறு சமுதாயங்களிலிருந்து அதிக எண்ணிக்கையில் இளம் வயதினர் பள்ளிகளில் சேர்க்கப்படுதல்.<br><br>கலப்புத் திருமணங்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.<br><br>முரண்பாடுகளின் எண்ணிக்கை குறைதல்.<br><br>அமைதி உருவாக்கத்திற்கு இளைஞர்களால் வழிநடத்தப்படும் முயற்சிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.<br><br>போராளி குழுக்களின் எண்ணிக்கை குறைதல் (மற்றும் புதிய குழுக்களின் உருவாக்கத்தைத் தடுத்தல்)<br><br>ஏராளமான இளைஞர் மையங்கள் திறக்கப்பட்டு, இவற்றை அணுகும் இளம் வயதினரின் எண்ணிக்கை அதிகரிப்பு<br><br>வட-கிழக்கில், மனித உரிமைகளின் மீறல்களின் எண்ணிக்கை குறைவு மற்றும் யுகுளீயு போன்ற சட்டங்கள் விலக்கப்படுதல். |

| பரிந்துரைகள | இடைவெளிகள் | யுக்திகள் | நிலைகாட்டிகள் |
|---|---|---|---|
| 4. பள்ளியிலுள்ள மற்றும் வெளியேயுள்ள விடலைப்பருவத்தினர் மற்றும் இளம் வயதினரின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்காக, அனைத்தும் அடங்கிய, பொருத்தமான, உட்படுத்தும் கல்வியை அனைவராலும் அணுக முடிவதை உறுதி செய்தல்.<br><br>"அரசுப் பள்ளிகளில், ஆசிரியர்கள் கிடையாது மற்றும் ஒருவருடைய வாழிடத்திலிருந்து மிகவும் தொலைவில் உள்ளன." பெண், 23, குல்லு, ஹிமாச்சல பிரதேசம் | இளம் வயதினரின் ஒட்டுமொத்த மேம்பாட்டின் மீது கவனம் செலுத்துகின்ற மற்றும் தங்கள், உறவு மற்றும் உலகைப் பற்றிய தகவலறிந்த தேர்வுகளை தரமான (பொருத்தமான மற்றும் நடைமுறைக்கேற்ற) கல்வியை அணுக இயலாமை.<br><br>கீழ்க்கண்டவற்றிற்கான தகவல்கள் மற்றும் வளங்களை அணுக, சென்றடைய முடியாதநிலை<br>ய) உயர் கல்விக்காக கிடைக்கும் வாய்ப்புகள்<br>டி) தகவலறிந்த முடிவுகள் மற்றும் தேர்வுகளைச் செய்வதற்கான உதவிக் குழு (வழிநடத்துவோர்)<br>உ) கடன் வசதிகள் உள்ளிட்ட நிதி ஆதாரங்கள்<br>ன) அரசுத் திட்டங்கள்<br><br>பாடத்திட்டத்தில், உள்ளூர் மற்றும் மரபுவழி அறிவாற்றலின் ஒருங்கிணைப்பு இல்லாமை.<br><br>விடலைப்பருவ கல்வித் திட்டத்தின் ஐந்து நிலைகளில் (யுநீ) நலிவு மற்றும் தடை.<br><br>பள்ளிக் கல்வி மட்டுமின்றி, உயர் கல்வி ஆகிய இரண்டிலுமே குறைபாடுகள் உள்ள இளைஞர்களுக்கு அணுக முடியாத மற்றும் வாய்ப்புகள் இல்லாத நிலை. | கீழ்க்கண்டவற்றிற்காக, ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 1 கிமீ தூரத்திற்குள் அனைத்துப் பிரிவுகளிலும், இளம் வயதினருக்கு இளைஞர் மையஙகளை உருவாக்குதல்:<br>ய) வழிகாட்டுதல். ஆலோசனை மற்றும் தகவல்கள் அளித்தல்<br>டி) சமுதாயத்திலுள்ள அனைத்து இளம வயதினருக்காக, தொடர்ந்து இளைஞர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு (வாழ்க்கைத் திறன்கள் மற்றும் தலைமைத் திறன்களை உருவாக்குதல்) ஏற்பாடு செய்தல்.<br>உ) தகவலறிந்த தேர்வுகளைச் செய்வதற்கும், அசல் உலகத் தொடர்புடன் மனத உரிமைகளின் நெறிகளைப் பேணுவதற்கும் இளம் வயதினருக்கு ஆற்றளித்தல்.<br>ன) தலைமையை ஏற்பதற்கு இளம் வயதினருக்கு வாய்ப்புகளை உருவாக்குதல்.<br><br>சுவுநு சட்டத்தின் கீழ், உயர்நிலைக் கல்வி வரை, அனைவருக்கும், இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வெளிப்படையான செயல்முறை மற்றும் ஆசிரியர் நியமனம் மற்றும் செயல்திறனுடன் வழங்குதல்.<br><br>வாழ்க்கைத் திறன்களை (சு விழிப்புணர்வு, கற்கும் திறன், மற்றவர்களைத் தூண்டி, தாக்கத்தை ஏற்படுத்துதல், நெறி அடிப்படையிலான தலைமைத் திறன்கள், முரண்பாட்டைத் தீர்க்கும் திறன்கள் போன்றவற்றை) பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் பயிற்சியைத் திருத்தியமைப்பதன் மூலம் உலகமயமாக்கல்.<br><br>விடலைப் பருவத்தினர் மற்றும் இளம் வயதினரால் யுநீ மீதான மாநிலத் தடை நீக்கம், திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் பயிற்சி மூலம் முழுமையான பாலியல் கல்வியை அணுக இயல வேண்டும்.<br><br>பள்ளி நிர்வாகக் குழுக்களில் மாணவர்களும் ஓர் அங்கமாக இருத்தல்.<br><br>பள்ளிகள் ஆற்றலுடன் செயல்படுவதற்கு, தொடர்ந்து கட்டாய சோதனைகள் | மையங்களின் எண்ணிக்கை மற்றும் இம்மையங்களை அணுகும் மக்கள் எண்ணிக்கையின் அதிகரிப்பு.<br><br>நிறுவப்பட்ட மையங்களின் எண்ணிக்கை, வழங்கப்படும் சேவைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு.<br><br>சமுதாயத்தில் குடிமக்கள் பிரச்சனைகளில் ஈடுபடுத்திக்கொள்ளும் இளம் வயதினரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு.<br><br>60 சதவீத மதிப்பெண்ணுடன், 70 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெறுதல்<br><br>தங்கள் சொந்த கருத்துக்கள் மற்றும் யோசனைகளைத் தெரிவிக்கும் திறன் கொண்ட இளம் வயதினரின் எண்ணிக்கை அதிகரிப்பு.<br><br>இளைஞர் சமுதாயத்தின் முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வேலைவாய்ப்பு∴ தொழில்முனைவு திட்டங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு. |

| பரிந்துரைகள | இடைவெளிகள் | யுக்திகள் | நிலைகாட்டிகள் |
|---|---|---|---|
| | கல்வியின் வர்த்தகமயமாக்கல் மற்றும் தனியார்மயமாக்கலின் பிரச்சனைகள்.<br><br>வாழ்க்கைத் திறன் கல்வி இல்லாமை<br><br>அசல் உலகத் தொடர்புகள் இல்லாமை.<br><br>ஆற்றல்மிக்க கண்காணிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாமை. | மற்றும் பள்ளிகளில் ஆசிரியர்களைப் பணியமர்த்துவதற்கு கண்டிப்பான மற்றும் வெளிப்படையான செயல்முறை.<br><br>அனைத்து ஆசிரியர்களுக்கும், பங்கேற்பு முறைகளில் தொடர்ந்து புதுப்பித்தல் பயிற்சி.<br><br>ஒவ்வொரு வீட்டிலிருந்தும் 10 கிமீ-க்குள் தரமான பட்டப்படிப்புக் கல்லூரிகளை நிறுவுதல்.<br><br>ஒவ்வொரு மூன்று மாநிலங்களுக்கும் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவுதல்.<br><br>சிறப்புத் தேவைகள் உள்ள நபர்களுக்காக வசதிகள் மற்றும் வளங்களை உருவாக்குதல். | |
| 5. இளம் வயதினர் அனைவரின் ஒட்டுமொத்த ஆரோக்கியம், நலன் மற்றும் உரிமைகளை உறுதி செய்கின்ற அனைத்தும் அடங்கிய, இளைஞர்களுக்கு உகந்த தகவல்கள், சேவைகள் மற்றும் உதவிக் குழுக்களை அணுகும் வசதி. "கருத்தரிப்பு, கருக்கலைப்பு அல்லது பாதுகாப்பு குறித்த கேள்விகளுடன் நாம் குடும்பக் கட்டுப்பாட்டு மையங்களுக்கு சென்றால், எங்கள் பெற்றோருக்கு இதைப்பற்றித் தெரியுமா என்றுதான் அவர்கள் முதலில் கேட்க விரும்புகிறார்கள்." பெண்இ 19இ புது டெல்லி. | பாதுகாப்பான பாலியல் செயல்முறைகள் குறித்த துல்லியமான தகவல்கள் மற்றும் இரகசியத்தன்மை இல்லாமை.<br><br>தகவலறிந்த மற்றும் அறிவுத் திறன் மிக்க உதவிக் குழு இல்லாமை.<br><br>தரமான, அனைவராலும் இயலக்கூடிய, இரகசியத்தன்மையுடைய, இளைஞர்களுக்கு உகந்த சுகாதார சேவைகளை அணுக இயலாமை.<br><br>தடுப்புமுறை மற்றும் குணப்படுத்துதல் ஆகிய இரண்டிலும், விடலைப் பருவத்தினர் மற்றும் இளைஞர்களுக்கான தரமான சுகாதாரத் திட்டங்கள் இல்லாமை. | பள்ளிக்குள் மற்றும் வெளியே இளம் வயதினரின் பாலியல் மற்றும் இனப்பெருக்கம்சார் ஆரோக்கியத்தில் முதலீடு செய்தல் மற்றும் பாதுகாத்தல் (குறிப்பாக மணமாகாத இளம் வயதினர், நீரிழிவுள்ள இளம் வயதினர், பாலியல் பணியாளர்கள்)<br><br>உறவுகளை உருவாக்குதல், தகவலறிந்த தேர்வுகளைச் செய்தல், பாலினம்சார் வன்முறையைக் குறைத்தல் மற்றும் இளைஞர்களுக்கு உகந்த சுகாதார சேவைகளை அதிகரித்தல் ஆகியவற்றுக்காக திறன்களை இலக்காகக் கொண்டு, வாழ்க்கைத்திறன்களை ஒருங்கிணைப்பதன் மூலம், முழுமையான பாலியல்சார் நிகராளர் கல்வித் திட்டங்களை மேம்படுத்தி, பலப்படுத்துதல்.<br><br>ஆரம்ப சுகாதார மையங்களில் (ஈஊள) இளைஞர்களுக்கு உகந்த மற்றும் இரகசியத்தன்மை கொண்ட ஆலோசனை சேவைகள் வழங்கப்பட வேண்டும்.<br><br>பள்ளியில் மனஉளைச்சலுக்கான ஆலோசனை மற்றும் அணுகக்கூடிய பரிந்துரையின் கீழ் அதிர்ச்சிக்கான ஆலோசனை கிடைத்தல்.<br><br>உயிருக்கு ஆபத்தான நோய்களுக்கு, எந்த நோயாளியும் மருந்தில் இல்லாதிருத்தல். | மையங்களின் எண்ணிக்கை மற்றும் இம்மையங்களை அணுகும் மக்கள் எண்ணிக்கையின் அதிகரிப்பு.<br><br>நிறுவப்பட்ட மையங்களின் எண்ணிக்கை, வழங்கப்படும் சேவைகளின் அளவு மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு. |

| பரிந்துரைகள | இடைவெளிகள் | யுக்திகள் | நிலைகாட்டிகள் |
|---|---|---|---|
| 6. பாலினம், ஜாதி, வகுப்பு, மதம் மற்றும் குறைபாடு அடிப்படையிலான அவமரியாதை, வன்முறை, பாகுபாடு மற்றும் ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல்.<br><br>“நமது அரசு அமைப்பு செயல்படும் விதம் மற்றும் நமது சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை வளர்ச்சி மற்றும மேம்பாட்டிற்கான தடைகளாக நான் உணர்கிறேன். இது இவ்வாறே தொடருமானால், நாம் 2015க்குப்பின் அல்லது 2050-க்குப்பின் நிலைக்காக திட்டமிட்டாலும், எல்லாம் அப்படியேதான் இருக்கும்.” ஆண், 22 வயது, தமிழ்நாடு | உரிமைகள் மற்றும் திட்டங்களைப் பற்றி அறியாத நிலை<br><br>பாலினத் திறகு முகக்கியத் துவம் தருகின்ற மற்றும் வழக்கங்களைக் கடந்து, ஜாதி, வகுப்பு மற்றும் குறைபாடுகள் எனும் எல்லைகளைத் தாண்டிச் செல்லும் ஆற்றல் கொண்ட அறிவாற்றல்மிக்க உதவிக் குழு இல்லாமை.<br><br>மூன்றாவது பாலினத் தின் அங்கீகாரிப்பு இல்லாமை | திட்டங்கள், ஊக்கத்தொகைகள் மற்றும் கிடைக்கும் நிதியுதவி குறித்த தகவல்களைப் பரப்புதல்.<br><br>தொடர்புடைய மற்றவர்களுடன் சேர்ந்து, அவர்களுடைய அறிவாற்றலை மேம்படுத்தவும், அவர்களுக்கு உணர்வை ஏற்படுத்தவும் வரம்பற்ற பயிலரங்கங்களை நடத்துதல்.<br><br>படிவங்கள், விண்ணப்பங்கள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு, மூன்றாவது பாலினத்தை ஒரு பிரிவாக அங்கீகரித்தல்.<br><br>மரபுவழி கண்ணோட்டத்திற்கு சவால் விடுத்து, முடிவெடுத்தலில் ஆண்கள் மற்றும் சிறுவர்களை ஈடுபடுத்தி, பெண்களையும் சரிசம பங்காளர்களாக ஆக்குவதன் மூலம், “மூன்றாவது பாலினம்” உள்ளிட்ட, பாலின சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையை நிறுத்துதல். | கொடுமைக்கு ஆளாக்கும் நிகழ்வுகளின் எண்ணிக்கை குறைதல்<br><br>பெண்களுக்கு எதிரான வன்முறை நிகழ்வுகளின் எண்ணிக்கை குறைதல். |
| ஏஐஜ. வேளாண்மை, உற்பத்தி மற்றும் தயாரிப்புகளில் ஆராய்ச்சி செய்து, மேம்படுத்தி மற்றும் உள்நாட்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த செயல்முறைகளைப் பாதுகாப்பதன் மூலம், சுற்றுச்சூழல் சார்ந்த முறையில் நிலைத்ததன்மை கொண்ட செயல்முறைகளை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்.<br><br>“வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்திற்காக ஒவ்வொரு நபருக்கும் நீருக்கான உரிமை இருக்க வேண்டும். இந்த ஆற்றின் அருகில் நான் வளர்ந்துள்ளேன், இப்போது நான் நீரை விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது! | சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டங்களின் தவறான செயலாக்கம் மற்றும் அமலாக்கம்<br><br>சமுதாய உடைமை மற்றும் இயற்கை வளங்கள் மீதான உரிமை குறித்த கவனம் இல்லாமை<br><br>சுற்றுச்சூழல் பாதிப்பிற்கு வழிவகுக்கும் வகையில், பொருட்கள், சேவைகள் மற்றும் தொழில்களுக்கான செயல்படுத்தக்கூடிய மாற்றுவழிகள் இல்லாமை.<br><br>மாற்றுவழிகள் உள்ள இடங்களில், மாற்றுவழிகள் குறித்த ஊக்கம் மற்றும் விழிப்புணர்வு இல்லாமை. | சுற்றுச்சூழல் கிளப்கள் போன்ற உள்ளூர் மற்றும் சமுதாய முயற்சிகளைத் தூண்டுதல்<br><br>ஆற்றலின் மாற்று வளங்கள் மீதான ஆராய்ச்சியைத் தூண்டுதல்<br><br>முறையான நகர்ப்புற மற்றும் கிராமப்புற திட்டமிடல் மற்றும் அழிந்துவரும் இயற்கை வளங்களை மீட்பதற்கான கொள்கைகளை அறிமுகப்படுத்துதல் ஆகியவை மூலம், சுற்றுச்சூழலின் நிலைத்ததன்மைக்கு திட்டமிடல்.<br><br>இத்திட்டங்கள் செயலாக்கப்படுவதை கண்காணிப்பதற்காக, இப்பகுதிகளில் இளைஞர்களின் குழுக்கள் உருவாக்கப்படுதல்.<br><br>மேம்பாட்டின் பெயரில் இடமாற்றம் ஏதும் இல்லாதிருத்தல். | இயற்கை மருந்துகள் மற்றும் தயாரிப்புகள் குறித்த அறிவாற்றலை பாதுகாப்பதற்கான மையங்களின் எண்ணிக்கையில் 60 சதவீத அதிகரிப்பு<br><br>உயிரிசார் எரிவாயு, சூரியஒளி ஆற்றல் போன்ற மாற்று வளங்களில் 40 சதவீத அதிகரிப்பு<br><br>வனத்தின் கீழுள்ள நிலத்தின் அளவு அதிகரிப்பு<br><br>சூழியல் கிளப்களின் எண்ணிக்கை அதிகரிப்பு. |

| பரிந்துரைகள | இடைவெளிகள் | யுக்திகள் | நிலைகாட்டிகள் |
|---|---|---|---|
| உள்ளூர் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அது எதற்காக குழாய் மூலம் மற்ற மாநிலங்களுக்கு விற்கப்பட வேண்டும்? " பெண், 28 வயது, ஒடிஷா | சுற்றுச்சூழல் பாதிப்பை குறைப்பதற்கான மாற்று வழிகளை வழங்கக்கூடிய மரபுவழி அறிவாற்றல் மற்றும் செயல்முறைகளைப் பயன்படுத்தாத சூழ்நிலை. அறிவாற்றல் அல்லது வேளாண்மை, பறவை வளர்ப்பு, மண்பாண்ட உற்பத்தி போன்ற சுற்றுச்சூழலுடன் நேரடியான பரிமாற்றம் உள்ள தொழில்களை கல்வி அமைப்பு ஊக்குவிக்காத நிலை. | வனங்களைக் கண்காணித்து, பாதுகாக்கும் பொறுப்புடன், வனப் பகுதிகளுடன் தொடர்புடைய சட்டங்களின் விதிமுறைகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்பும் பொறுப்பும் இளைஞர் குழுக்களுக்கு அளிக்கப்படுதல்.<br><br>பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சுற்றுச்சூழல் கிளப்கள் உருவாக்கப்படுதல்.<br><br>சுற்றுச்சூழலுடன் இணைந்து பணியாற்றி, அதனைப் பாதுகாப்பதுடன் தொடர்புடைய உள்ளூர் தொழில்களை பாடத்திட்ட மேம்பாடு உள்ளடக்கி, ஊக்கமளிக்க வேண்டும். | |

"இக்குழுவின் ஓர் அங்கமாக இருப்பதில் நான் ஆற்றலளிக்கப்பட்டுள்ளதைப்போல் உணர்கிறேன், நான் பார்த்தவை மற்றும் கேட்டவைகளை கொண்டு செல்கின்ற பொறுப்பு இப்போது எனக்குள்ளது. நாம் காண விரும்பும் மேம்பாட்டின் ஓர் அங்கமாக நாம் அனைவருமே இருக்க வேண்டும்." (பெண், 18 வயது, அசாம்)

## கூடுதலாகக் கண்டறியப்பட்டவை

தற்போதுள்ள கருப்பொருட்களையும் என்ஜிஓக்கள் கடந்து சென்று, பாலினம், MDG-க்கள், அமைதி மற்றும் ஏற்றத்தாழ்வு ஆகியவை இக்கட்டமைப்பில் சேர்க்கப்பட வேண்டிய இதர பொருந்தும் கருப்பொருட்கள் என்பதைக் கண்டறிந்தனர். பாலினம் மற்றும் MDG-க்கள் தனி கருப்பொருட்களாக கருதப்பட்ட அதே நேரத்தில், அமைதி மற்றும் ஏற்றத்தாழ்வு ஆகியவை, முரண்பாடு மற்றும் பாதிக்கப்படத்தக்கதன்மை மற்றும் மக்கள்தொகை இயக்கவியலுடன் முறையே சேர்க்கப்பட்டன.

| தற்போதுள்ள கருப்பொருட்கள் | உருவாகிவரும் கருப்பொருட்கள் |
|---|---|
| கல்வி | முழுமையான மற்றும் அனைத்தும் அடங்கிய கல்வி |
| வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு | வளர்ச்சி, வாழ்வாதாரம் மற்றும் தொழில்முனைவு |
| ஆளுகை | பொறுப்பேற்றல் மற்றும் பொறுப்பான ஆளுகை |
| உணவுப் பாதுகாப்பு | உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து |
| சுற்றுச்சூழல் நிலைத்ததன்மை | சுற்றுச்சூழல் நிலைத்ததன்மை |
| முரண்பாடு மற்றும் பாதிக்கப்படத்தக்கதன்மை | முரண்பாடு மற்றும் பாதிக்கப்படத்தக்கதன்மையுள்ள பகுதிகளில் அமைதி |
| சுகாதாரம் | முழுமையான சுகாதாரம் மற்றும் நலன் |
| | பாலினம் |
| | ஏற்றத்தாழ்வு |
| | சுற்றுச்சூழல் திறனளித்தல் |
| | இளைஞர் பங்கேற்பு மற்றும் தலைமை |

இதைப்போலவே, என்ஜிஓ-க்கள் அடையாளம் காண வேண்டிய பிரச்சனைகள், கவலைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக உள்ள ஒவ்வொரு கருப்பொருளின் கீழும் தற்போதுள்ள தகுதிவிதிகள், பிரிவுகள் மற்றும் அளவுருக்களும் பங்கேற்பாளர்களால் விரிவுபடுத்தப்பட்டன. IEC, ஊடகங்கள், கொள்கை, ஆராய்ச்சி, பயிற்சி, மேம்பாடு மற்றும் அடையாளம் காட்டக்கூடிய குறிப்பிட்ட நிலைகாட்டிகள் முக்கியமாக சேர்க்கப்பட வேண்டுமென்று என்ஜிஓ-க்கள் கருதின.

| தற்போதுள்ள தகுதிவிதிகள்.:. பிரிவுகள்.:. அளவுருக்கள் | உருவாகிவரும் தகுதிவிதிகள்.:. பிரிவுகள்.:. அளவுருக்கள் |
|---|---|
| நிதிநிலை தயாரித்தல் | ஐநுஊ.:. ஊடகங்கள் |
| வெளிப்படைத்தன்மை, பொறுப்பேற்றல் மற்றும் கண்காணித்தல் | கொள்கை |
| பங்கேற்பு | ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் மேம்பாடு |
| உள்கட்டமைப்பு (பொருள் சார்ந்தது மற்றும் சமூகம் சார்ந்தது) | நிலைகாட்டிகள் |
| பாகுபாடு மற்றும் வன்முறையைக் கையாளுதல் | |
| சிறப்புக் கவனிப்புக் குழுக்கள் | |

## ஆலோசனை ஆவணங்கள

ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் கருவித் தொகுப்பு வலை இணைப்பு http//bit.ly/10BsQp4

இக்கருவித்தொகுப்பு, பார்வைக்காக அனைத்து பங்காளர்களாலும் பயன்படுத்தப்பட்டது. பங்காளர்களில் ஒவ்வொருவரும் அவர்களது சூழ்நிலைக்கேற்றவாறு புதிய வடிவங்களை ஏற்று, உருவாக்கினர்.

- ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் சிந்தனைக் கூட்டங்கள் வலை இணைப்பு: http//bit.ly/Yzlmnd
- ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் வரைபடங்கள் வலை இணைப்பு http//bit.ly/XvnQy4
- ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் வீடியோ படங்கள் வலை இணைப்பு http//bit.ly/13WCJUr
- ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் சுவரோவிய வலை இணைப்பு: http//bit.ly/Z5PIRf

ப்ரவாஹ்

ப்ரவாஹ் பயிற்சியாளர்கள் பயன்படுத்திய சில செயல்முறைகளைக் காண, பின்வரும் இணைப்புகள் மீது கிளிக் செய்யவும் -

- தொலைநோக்கு நுட்பத்தைப் பயன்படுத்தும் நேரவரம்பு பயிற்சி: http://bit.ly/ZbVZVt
- நாங்கள் விரும்பும் உலகை வரைதல்: http://bit.ly/14IKc8I

ஆலோசனைக்காக ப்ரவாஹ் பயன்படுத்திய வடிவமைப்பைக் காண, பின்வரும் இணைப்புகள் மீது கிளிக் செய்யவும்:

https://dl.dropbox.com/u/53079022/Consultation%20Design%20Jorhat.docx
https://dl.dropbox.com/u/53079022/Design%20Puri%20consultation.docx

தி ஒய்பி .:.பவுண்டேஷனின் அமர்வுத் திட்டத்தைக் காண, பின்வரும் இணைப்பை கிளிக் செய்யவும்:

https://www.dropbox.com/s/9am1qcftje8klpx/Session%20Format%20-%20TYPF.doc?n=146402559

ஐந்து இளைஞர் தொகுதிக்கான மண்டல அறிக்கைகளைக் காண, கிளிக் செய்யவும்:

http://www.worldwewant2015.org/node/317995

## பங்கேற்பாளர்களின் குறிப்புகள்

- "2000-ம் ஆண்டில், எங்கள கிராமத்தில் யாரிடமும் மொபைல் ∴போனோ அல்லது கணினியோ கிடையாது. வாழ்க்கை மிகவும் வித்தியாசமாக இருந்தது. இன்றைக்கு அனைவரிடமும் மொபைல் உள்ளது, நாங்கள அனைவருமே கணினியைப் பார்த்துவிட்டோம், ஆனாலும் 2000-இருந்த பிரச்சனைகள் அனைத்தும் இன்னமும் அப்படியேதான் உள்ளன." – ராஜ்குமார், ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் இந்தியா

- "நமது அரசு அமைப்பு செயல்படும் விதம் மற்றும் நமது சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை வளர்ச்சி மற்றும மேம்பாட்டிற்கான தடைகளாக நான் உணர்கிறேன். இது இவ்வாறே தொடருமானால், நாம் 2015க்குப்பின் அல்லது 2050-க்குப்பின் நிலைக்காக திட்டமிட்டாலும், எல்லாம் அப்படியேதான் இருக்கும்." – மேகவண்ணன்இ ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் இந்தியா

- "நாம் எந்த அளவிற்கு முயற்சித்து, திட்டமிட்டாலும், இப்பிரச்சனைகளை நாம் தீர்க்காதவரை நம்மால் எதையுமே அடைய முடியாது." - ரஸியா ரெஸ்ட்லெஸ் டெவலப்மென்ட் இந்தியா

- "வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்திற்காக ஒவ்வொரு நபருக்கும் நீருக்கான உரிமை இருக்க வேண்டும். இந்த ஆற்றின் அருகில் நான் வளர்ந்துள்ளேன், இப்போது நான் நீரை விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது! உள்ளுர் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அது எதற்காக குழாய் மூலம் மற்ற மாநிலங்களுக்கு விற்கப்பட வேண்டும்?" ப்ரவாஹ் ஒடிஷா

- "என்னுடைய வனங்களிலிருந்து விறகுக்காக மரம் வெட்டுவது குற்றமென்றால், எரிபொருளுக்காக அரசு எனக்கு உயிரிசார் எரிவாயுவை வழங்குமா?" ப்ரவாஹ் ஒடிஷா

- "இக்கூட்டத்தில் நான் நிறையக் கற்றுக் கொண்டேன் - எவ்வாறு தகவல் பரிமாற்றத்தில் ஈடுபடுவது, எனது கருத்துக்களை எடுத்துக்கூறுவது மற்றும் மேம்பாடு எவ்வாறு ஏற்படும் என்பதைப் பற்றி சிந்திப்பது..." பத்மினி கில்லேய், 18 வயது ப்ரவாஹ் ஒடிஷா

- "அரசு முன்னேற்றத்தைக் கொண்டு வரும் என்று நாம் காத்திருக்கக்கூடாது... நமக்குள்ளிருந்து மாற்றம் தொடங்க வேண்டும்." பித்திகா முஸ்த.∴பா, 20 வயது ப்ரவாஹ் ஒடிஷா

- "செய்வதற்கு எதுவும் இல்லாத நிலையில், பல இளைஞர்கள் போதை மருந்துகள் மற்றும் போராளிகளுடன் தொடர்புடைய அதிகாரத்தினால் கவரப்படுகிறார்கள்..." டீ. ரூபன் தங்லியான்லால், 22 வயது ப்ரவாஹ் மணிப்பூர்

- "நாங்கள் பங்கேற்கவும், ஆர்வத்துடன் கேட்கவும், உற்பத்தித்திறனுடன், ஒத்துழைக்கவும் விரும்புகிறோம்." எட்லினா கொர்கெட்டா, 23 வயது ப்ரவாஹ் அசாம்

- "நான் மிகவும் வேதனையடைந்து என்னையே கேட்டுக் கொள்கிறேன், ஏன் என் தோழர்களும் மறறவர்களும் பள்ளிக்குச் செல்லாமல் இருக்கிறார்கள்." ப்ரவாஹ் அசாம்

- "சுகாதார வசதிகள் கிடைப்பதில்லை. உதாரணமாக, நாங்கள் உடற்பரிசோதனை ஒன்றிற்காக சென்றிருந்தபோது, இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டியிருந்தது, ஆனால் அதற்கான வசதி அங்கில்லை..." ப்ரவாஹ் வட கிழக்கு

- "பொழுதுபோக்கு அல்லது விளையாட்டிற்கான வாய்ப்புகள் ஏதும் எங்களுக்கு இல்லை... இம்மண்டலத்தின் இளைஞர்கள் மீது குத்தப்பட்டுள்ள முத்திரை: - தீவிரவாதிகள்!" ப்ரவாஹ் வட கிழக்கு

- "எனது சமுதாயம், மண்டலம், மாநிலம் மற்றும் நாட்டில் எனது குரல் கேட்கப்படும் என்பது எனக்குத் தெரியாது! இந்த முக்கியத்துவம் வாய்ந்த செயல்முறையில் நான் ஓர் அங்கமாக இருப்பதில் பெருமையடைகிறேன்..." பினந்தோ பெகுஇ 22 வயது ப்ரவாஹ் அசாம்

- "எனது மண்டலத்திலிருந்து 40 நபர்கள் மட்டும் கைவசமுள்ள பணியில் நேர்மையாக இல்லாமல் இருக்கலாம்... இந்த ஆலோசனை ஏன் முன்னதாகவே தொடங்கப்படவில்லை?" ப்ரவாஹ் வட கிழக்கு

- “இக்குழுவின் ஓர் அங்கமாக இருப்பதில் நான் ஆற்றலளிக்கப்படுவதாக உணர்கிறேன், நான் பார்த்தவை மற்றும் கேட்டவைகளை நான் திரும்ப எடுத்துச் செல்லும் பொறுப்பு எனக்குள்ளது. நாம் காண விரும்பும் இந்த முன்னேற்றத்தின் ஓர் அங்கமாக நாம் அனைவருமே இருக்க வேண்டும்.” ப்ரவாஹ் வட கிழக்கு

- அமைதி – “நாம் முரண்பாடு மற்றும் பாதிக்கப்படத்தக்க தன்மையிலிருந்து விலகிச் சென்றாலும், அமைதிக்காக உழைக்க வேண்டும்…” ப்ரவாஹ் வட கிழக்கு

- சுற்றுச்சூழல் - “எண்ணெய்க்கான இயற்கை வளங்கள் - தோண்டப்பட்டது அப்படியே விடப்பட்டுள்ளது - இயற்கைக்கு மரியாதை இல்லை - சமநிலையை ஏன மீட்டமைக்கக்கூடாது? மேலும் செங்கற்சூளைகள், நாம் ஏன் அவற்றை புனரமைப்பு செய்யக்கூடாது?” ப்ரவாஹ் வட கிழக்கு

- இளைஞர் – “ஒவ்வொரு குழுவும் தங்கள் சொந்த நிரலை வலியுறுத்துகிறது - ஆனால் யாரும் ஒன்றுசேர்ந்து பேசுவதில்லை - விளையாடும் வாய்ப்புகள், விளையாட்டுகள் மற்றும் பரிமாற்றத்திற்கான வாய்ப்புகள் இல்லை … இவை அவர்களை போர்க்குணத்திற்கு வழிநடத்துகின்றன.” ப்ரவாஹ் மேகாலயா

- மறுவூட்டு: “எனது குரல் மாநிலம், மண்டலம், நாடு மற்றும் உலகினால் கேட்கப்படும் என்பதை நான் உணரவில்லை! இது ஒரு பெருமைமிக்க தருணமாகும்.” ப்ரவாஹ் வட கிழக்கு

- “நாம் திரும்பிச் செல்லும்போது… நாம் காண விரும்பும் மாற்றத்தின் ஒரு பகுதியாக இருக்கும் பொறுப்பு நமக்குள்ளது… நமது சமுதாயங்களில் மற்றும் பகுதிகளில்.”ள ரூபன் – ஆலோசனை இங்கு முடிவதில்லை…. ப்ரவாஹ் மணிப்பூர்

- “நமது சமுதாயத்தை மேம்படுத்துவதற்கு பரஸ்பரம் நமது கருத்துக்களை நாம் மதிக்க வேண்டும்.” (ஆண், 22 வயது, உத்தர பிரதேசம்) தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “இளம் வயதினரை வயது வந்தோரிடமிருந்து ஒரு பெரிய கோடு வேறுபடுத்துகிறது. இளம் வயதினர் தங்களுக்கு இடங்களின் அறிவாற்றல் இருக்கும்போது அதற்குள்ளாக ஈடுபட்டு, மாற்றத்தை உருவாக்குபவர்களாக செயல்பட்டு, ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த விரும்புகின்றனர். அத்தகைய வாய்ப்புகள், எதிர்காலம் குறித்த நம்முடைய அதீத ஆர்வங்கள், கனவுகள் மற்றும் நம்பிக்கைகளுடன் தொடர்புள்ளவை.. தேர்தலில் போட்டியிடுவதற்கு அல்லது நமது நாட்டின் பிரதம மந்திரியாவதற்கு நமது வயது ஏன் ஒரு தடையாக இருக்க வேண்டும்.” (பெண்இ 20 வயது இ சண்டிகர்) தி ஒய்பி ∴ பவுண்டேஷன்

- “இளைஞர்களுக்கும், கொள்கை உருவாக்குபவர்களுக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி உள்ளது. அரசினால் இளம் வயதினரை சுலபமாகச் சென்றடைய முடியும், ஆனால் இளைஞர்களுக்கு அவ்வாறு செய்வது பிரச்சனையாகும்.” (குழு கலந்துரையாடல்) தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “பள்ளி ஆசிரியர்கள் பாகுபாடின்றி, அனைவருக்கும் கல்வி புகட்ட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். குறைபாட்டுடன் வாழும் இளம் வயதினருக்கு சரிசம உரிமைகளும், வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன்.” (பெண்இ 19இ புது டெல்லி) தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “சிறந்த கல்வி, இளம் வயதினரின் ஆற்றல்களை உருவாக்க உதவும் என்று நான நம்புகிறேன்” (பெண்இ 19 வயது இ உத்தராகண்ட்) தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “கிராமப்புறங்களிலுள்ள பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை, குறிப்பாகப் பெண் குழறந்தைகளை வயல் வேலைக்குச் செல்லும்படி கட்டாயப்படுத்தி, அவர்கள் பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிடுகின்றனர். சிறுமிகளைக் காட்டிலும் சிறுவர்களே விரும்பப்படுகின்றனர்.” (ஆண், ஜான்சி, உத்தர பிரதேசம்) தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “அரசுப் பள்ளிகளில், ஆசிரியர்கள் இருப்பதில்லை மற்றும் ஒருவருடைய வாழிடத்திலிருந்து மிகவும் தொலைவில் உள்ளன.” (பெண்இ 23இ குல்லு, ஹிமாச்சல பிரதேசம்) தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “அவசரநிலைகளில், சிகிச்சைக்காக ஒருவர் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. கருவுற்ற பெண்களுக்கு நிலைமை மோசமாக இருந்தால், சரியான அறுவைசிகிச்சை அறை இருப்பதில்லை மற்றும் அவர் நீண்ட தூ ரத்திற்கு பயணம் செய்ய வேண்டும், இது மிகவும் சிரமமானது, ஏனென்றால் போக்குவரத்து சேவைகள் மற்றும் சாலைகள் ஒழுங்காகப் பராமரிக்கப்படுவதில்லை.” தி ஒய்பி ∴ பவுண்டேஷன்

- “கிராம மருத்துவமனைகளில் பொதுவாக நான்கு அல்லது ஐந்து படுக்கைகளே இருக்கும், அங்கு சென்றடைவதற்கு ஆம்புலன்ஸிற்கு 3-4 மணி நேரம் ஆகிறது, தீயணைப்பு சேவை ஏதும் கிடையாது மற்றும் இளம் வயதினர் கொடுக்கும் புகார்களை காவல்துறை பொதுவாக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுவதில்லை”. (ஆண்இ 24 வயது இ ஹிமாச்சல பிரதேசம்) தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “பெண்கள் மற்றும் அரவாணிகளுக்கு பொது கழிப்பிடங்கள் நல்ல முறையில் வழங்கப்பட வேண்டும் மற்றும் அவை பயன்படுத்தும் வகையில் இருப்பதும் முக்கியமாகும்” (குழு கலந்துரையாடல்களில் சிறப்பிக்கப்பட்டது) தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “யுே அட்டை, ஓட்டுனர் உரிமம் போன்ற முக்கியமான அலுவல்சார் ஆவணத்தைப் பெறுவற்கு நீங்கள் அருகிலுள்ள ஊருக்குப் பயணம் செய்ய வேண்டும், அது சில சமயங்களில் 3 அல்லது 4 மணி நேரம் பயணம் செய்யும் அளவிற்கு தள்ளியிருக்கக்கூடும்.” (ஆண்இ 22 வயது இ உத்தராகண்ட்) தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “கருத்தரிப்பு, கருக்கலைப்பு அல்லது பாதுகாப்பு குறித்த கேள்விகளுடன் நாம் குடும்பக் கட்டுப்பாட்டு மையங்களுக்கு சென்றால், எங்கள் பெற்றோருக்கு இதைப்பற்றித் தெரியுமா என்றுதான் அவர்கள் முதலில் கேட்க விரும்புகிறார்கள்.” (பெண்இ 19இ புது டெல்லி). தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “ஒவ்வொரு கிராமத்திலும் ஆஷாக்கள் உள்ளனர், ஆனால் அவர்கள் மணமான பெண்களுக்கு மட்டுமே தகவல்களை வழங்குகிறார்கள். இளம் பெண்களுக்கு, அவர்களுடைய சகோதரிகளும், தோழிகளுமே தகவல்களுக்கான ஆதாரமாக உள்ளனர்.” (பெண்இ 22 வயது இ ஜான்சி, உத்தர பிரதேசம்) தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “நமது நாட்டில் சட்டம் குறித்த பயமே இல்லை, அதனால்தான் பல குற்றங்கள் நடைபெறுகின்றன. மற்ற நாடுகளில் நல்ல சட்டங்கள் உள்ளன மற்றும் இங்கிருப்பதைப் போலல்லாமல், குடிமக்கள் சட்டங்களைப் பின்பற்றுகின்றனர்.” ( ஆண்இ 28 வயது, பஞ்சாப் ). தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “காவல்துறை அநாவசியமாக ஒதுக்கப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த இளம் வயதினரை, அது அவர்களுடைய தவறாக இல்லாவிட்டாலும், இலக்கு வைக்கிறது” (ஆண்இ 21 வயது, லக்னோ, உத்தர பிரதேசம்) தி ஒய்பி ∴ பவுண்டேஷன்

- “நான் காவல் நிலையத்திற்குச் சென்றால், பெரும்பாலும் அவர்கள் குற்றத்தை∴பழியை என் மீதே திருப்பிவிடுகிறார்கள். எனவே, வேறு வழியில்லாத நிலையில்தான் நாங்கள் அவர்களை அணுகுகிறோம். உதாரணமாக, ∴ போன் தொலைந்துவிட்டதைப் பற்றி புகார் அளிக்க நான் சென்றேன், ஆனால் அது என் கவனக்குறைவால்தான் நடந்தது, நான் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று காவல்துறை என்னிடம் கூறியது.” (ஆண்இ 20 வயது, லக்னோ, உத்தர பிரதேசம் மற்றும் ஆண்இ 22 வயது, டெல்லி) தி ஒய்பி ∴ பவுண்டேஷன்

- “நான் ஒரு பயிற்சி பெற்ற ஆசிரியராக இருந்தாலும், வேலை ஏதும் கிடைக்கவில்லை, மற்றும் தகுதி குறைவாக உள்ளவர்களுக்கு ஊழல் காரணமாக வேலை கிடைக்கிறது.” (ஆண்இ 25 வயது, ஜம்மு, காஷ்மீர்) தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “எங்கள் கிராமங்களில் பணிபுரியும் என்ஜிஓக்களே பொதுவாக தகவலளிக்கின்ற ஒரே அமைப்பாக உள்ளன. இணையதளம் இருந்தாலும், எங்களுக்கு மின்வசதி இல்லாத காரணத்தால், எங்களால் அதைப் பயன்படுத்த

முடியவில்லை.” (பெண்இ 18 வயது, லலித்பூர், உத்தர பிரதேசம்) தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “இளம் வயதினர் போதைமருந்துகளைப் பயன்படுத்தி, தங்கள் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்கின்றனர். போதைமருந்தில்லாத சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் நான் ஈடுபட விரும்புகிறேன், இதில் எந்த இளம் நபரும் போதைமருந்திற்கு அடிமையாகமாட்டார்.” (ஆண், 23 வயது, பாகேஷ்வர், உத்தராகண்ட்). தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “ஏராளமான சமயங்களில் பொது விநியோகப் பொருட்கள் மற்றும் சந்தையில் கிடைக்கும் காய்கறிகள் கெட்டுள்ளன (கால் ஹியூ) அல்லது கிருமித் தொற்றுக்கள் நிறைந்துள்ளன. எனவே, எங்க்ள சந்தைகளில் ஏராளமான வகை காய்கறிகள் இருந்தாலும், அவற்றை எங்களால் வாங்க முடிவதில்லை. உள்ளூரில் என்ன உற்பத்தி செய்யப்படுகிறதோ அதையே வாங்குகிறோம், ஏனென்றால் அது புதிதாகவும் உண்ணக்கூடியதாகவும் உள்ளது” 20இ ஆண், உத்தராகண்ட். தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “மிக அருகாமையிலுள்ள பள்ளியானது, எனது கிராமத்திலிருந்து 20 கிமீ தள்ளி உள்ளது. எனவே, எனது கிராமத்திலிருந்து பள்ளிக்குச் செல்வது குழந்தைகளுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேலும், இருக்கும் பள்ளிகளைக் காட்டிலும் குழந்தைகளின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது.” 24இ ஆண், கெம்ப்டி, உத்தராகண்ட், தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “இளம் வயதினர் கேட்கப்படுவதற்கான தளம் ஒன்றைப் பெறுவதில்லை” – பொதுவான ஒருமித்த கருத்து, இளம் வயதினர், உத்தர பிரதேசம், தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “ஜம்மு மற்றும் காஷ்மீரிலுள்ள இளம் நபர்கள் இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். எங்களில் சிலரே இந்தியாவின் பிற பகுதிகளைச் சேர்ந்தவர்களை சநதிப்பதற்காக வெளியே வருகிறோம். ஆற்றலளிக்கப்பட்டுள்ளதாக நினைப்பவர்கள் பலருக்கும்கூட இவ்விருப்பத்தேர்வு இல்லை. சாதாரணமான மற்றும் வழக்கமான பரிமாற்றத்திற்காக நாங்கள் தவிக்கிறோம்; இருந்தாலும், நாங்கள் எப்போதுமே அரசினால் தனிமைப்படுத்தப்பட்டு, வித்தியாசமாக நடத்தப்படுகிறோம். நான் பிரிக்கப்பட்டு, திருப்தியின்றி உணர்கிறோம்.” 22இ ஆண், காஷ்மீர். தி ஒய்பி ∴பவுண்டேஷன்

- “நாங்கள் ஓர் அரசு மருத்துவமனைக்குச் சென்றால், தனது தனியார் மருத்துவ மையத்திற்கு மாலை வரும்படி மருத்துவர் எங்களிடம் கூறுகிறார். மேலும் சில பரிசோதனைகளை செய்ய வேண்டுமென்று அவர் எங்களிடம் சொல்கிறார். தனியார் மருத்துவ மையங்களில், பரிசோதனைகள் மற்றும் எங்கள் சிகிச்சைக்காக நாங்கள் பணம் செலுத்த வேண்டியுள்ளது. மருந்துக் கடையிலும் நாங்கள் பணம் கொடுக்க வேண்டும்.” 20இ பெண், டெல்லி, தி ஒய்பி ∴ பவுண்டேஷன்

UNITED NATIONS
संयुक्त राष्ट्र

யுனைடெட் நேஷனல் ரெஸிடன்ட் கோர்டினேட்டர்ஸ் ஆ.ஃ.பிஸ்
55, லோதி எஸ்டேட்
புது தில்லி-110003
இந்தியா
தொலைபேசி: 91-11-46532333
தொலைநகல்: 91-11-24627612
மின்னஞ்சல்: unrco@one.un.org
வலைதளம்: http://in.one.un.org